உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

கொழும்பு விலையில் கிளிநொச்சியில்...
மொத்தமாகவும் சில்லறையாகவும்
புதிய மக்கள்வங்கி முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு:
077 2612452, 077 3357333
077 3322993, 021 2283829
Fax : 0212283829
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



# வடக்குத் தேர்தல் நீதியாக நடவாது

## அடித்துக் கூறுகிறது ஐக்கிய சோஷலிஸக் கட்சி



கொழும்பு, ஜூலை 11
''வடக்குத் தேர்தலை ஜனநாயக முறையில் நடத்துவதாக அரசு கூறிக் கொண்டாலும், நிச்சயமாக வடக்குத் தேர்தலின்போது அரசு ஏதாவது குளறுபடிகளைச் செய்தே தீரும்'' என ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய நேற்றுத்தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் அவர் தெரிவித்ததாவது:

''நாம் இதுவரை காலமும் செய்துவந்த போராட்டங்களுக்கு சீக்கிரமாக ஒரு தீர்வொன்று வடமாகாண சபைத் தேர்தல் மூலமாக வரப்போகிறது. இந்த வெற்றி அனைவருக்கும் கிடைக்கும் வெற்றியாகும். ஆனால், இந்த வெற்றியை அடைய இன்னும் நிறையத் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

வடக்கில் தேர்தல் சீரான முறையிலும், அமைதியான முறையிலும் நடைபெற வேண்டுமானால், அங்கிருக்கும் இராணுவத்தினரை உடனடியாக அகற்ற வேண்டும்.

தற்போது இந்தியாவும், கொடுத்த வாக்குறுதியைப் போலவே வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கூறிவிட்டது.

தற்போது அரசு தூக்கத்திலிருந்து விழித்து விட்டதைப் போல செயற்பட்டுக் கொண்டு வருகிறது என்றுதான் கூற வேண்டும். காரணம், 7 வருடங்களுக்கு முன் திருகோணமலையில் வைத்து மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 12 சந்தேகநபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவையெல்லாம், எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை ஒட்டி நடத்தப்படுகின்ற நாடகங்களாகும்.

இப்படிப்பட்ட அரசு வடமாகாண சபைத் தேர்தலை எந்த ஒரு பிரச்சினைகளும் ஏற்படாதவாறு, ஜனநாயக முறையில் நடத்தப்போவதாக சர்வதேசத்திடம் கூறி வருகிறது. ஆனால், நிச்சயமாக இத் தேர்தலில் அரசு வெற்றிபெறும் நோக்குடன் குளறுபடிகளைச் செய்தே தீரும் - என்றார். (த-சி)

### ஈ.பி.டி.பி. உறுப்பினர் விஜயகாந்த் விளக்கமறியலில்

**திருட்டு நகை விற்ற வழக்கில்**

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்.மாநகரசபை ஆளுந்தரப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.டி.பி. உறுப்பினரான விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

திருட்டு நகைகளை அடகு வைக்க முற்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் விஜயகாந்த் உட்பட இருவர் கைதானார்கள். விசாரணையின் பின்னர் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். நால்வரும் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமாரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் அப்போது உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான முடியப்பு றெமீடியஸ், சர்மினி விக்னேஸ்வரன், கணாதீபன் ஆகியோர் முன்னிலையானார்கள். (த-4)

### உதயன் செய்தியாளர் மீது நேற்றிரவு தாக்குதல்



யாழ்ப்பாணம், ஜூலை 11
'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் குணாளன் டிலீப் அமுதன் நேற்று மாலை இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பணி முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்த டிலீப் அமுதனை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு அருகில் பிரதான வீதியில் வைத்து இனந்தெரியாதோர் தாக்கி உள்ளனர்.

சிவப்பு நிற ஓட்டோ ஒன்றில் வந்தவர்கள் இவரது மோட்டார் சைக்கிளை உதைத்து தள்ளி வீழ்த்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர். இதனால் அருகில் இருந்த வடிகாலுக்குள் வீழ்ந்த செய்தியாளர் கை மற்றும் கால்களில் காயமடைந்தார். காயமடைந்த அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ-86)

## கூழாவடியில் காணிகளை விடுவித்தனர் படையினர்

**நீதிமன்றில் வழக்கு தாக்கலான நிலையில்**

யாழ்ப்பாணம், ஜூலை 11
ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம், தற்போது அந்தக் காணிகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளது.

குறித்த காணியைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்த நிலையில் அந்தக் காணி உரிமையாளர்கள் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்.குடாநாட்டை 1996 ஆம் ஆண்டு இராணுவம் கைப்பற்றியது. அந்தக் காலப் பகுதியிலிருந்தே, ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் 4 பேருக்குச் சொந்தமான தனியார் காணிகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்திருந்தனர். அதற்குள் வீடுகளும் உள்ளடங்கியிருந்தன.

இராணுவ முகாம் அமைந்துள்ள காணியை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்களும் ஒட்டப்பட்டன.

குறித்த காணியை அளவீடு செய்வதற்குச் சென்ற நில அளவையாளரிடமும், உரிமையாளர்கள் காணிகளை அடையாளம் காட்ட மறுத்து எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன் காணிச் சுவீகரிப்புக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கலும் செய்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாகக் குறித்த இராணுவ முகாமிலுள்ள பொருள்கள் ஏற்றப்பட்டு, 4 உரிமையாளர்களிடமும் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. (த-5)

## பொதுநலவாயத்துக்கு முன் முன்னேற்றம் மிக அவசியம்

**இலங்கையிடம் பிரிட்டன் கோரிக்கை**



யாழ்ப்பாணம், ஜூலை 11
போர் முடிவடைந்ததன் பின்னர் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றம் தேவை எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள பிரிட்டன், இவை தொடர்பான முன்னேற்றத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொது நலவாய தலைவர்கள் மாநாட்டுக்கு முன்னர் காட்ட வேண்டும் என்று கூறியுள்ளது.

பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய

தொடர்ச்சி: பக்கம் 21

### புத்தளம் அம்மணிகள் கோண்டாவிலில் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 11
புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்த நான்கு பெண்கள் கோண்டாவில் கோயில் ஒன்றில் வைத்து பெண் ஒருவரின் 15 பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்தனர்.

சங்கிலியை இழந்தவர் கூக்குரல் இடவே கோயிலில் கூடியிருந்தவர்கள் குறித்த

தொடர்ச்சி: பக்கம் 21

## வலி.வடக்கு மக்களின் மனுவில் அமைச்சுக்குக் கால அவகாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
வலி.வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத் தேவைகளுக்காகச் சுவீகரிப்படுவதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், காணி அமைச்சு அதற்கான ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது நீதிமன்றம்.

காணி சுவீகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

காணி அமைச்சரின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து ஒருவர் மன்றில் முன்னிலையானார்.

வலி.வடக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத் தேவைகளுக்காகச் சுவீகரிப்பதை எதிர்த்து 2 ஆயிரத்து 176

தொடர்ச்சி: பக்கம் 21

**இந்தியா**



பக். 06
தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

**உலகம்**



பக். 07
அச்சுறுத்தல்களுக்கு அடிபணியக் கூடாது

**விளையாட்டு**



பக். 22
ஏற்பாட்டாளர்களின் தவறால் சம்பியனை இழக்கும் அணி



பக். 23
இலங்கையை வீழ்த்தியது இந்தியா

### முல்லைத்தீவு மீனவர்களின் போராட்டம் முடிவு

முல்லைத்தீவு, ஜூலை 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வெளி மாவட்ட மீனவர்களை வெளியேற்றக் கோரி முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் அமைப்புகளின் சம்மேளனத்தினால் கடந்த இரண்டு தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று புதன்கிழமை மதியத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரினால் எழுத்து மூலமாக வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தெற்கு மீனவர்கள் வெளியேற்றப்பட்டால் மாத்திரமே உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்படும் என்று மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்தினவினால் மீனவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எழுத்துமூலமான உறுதிமொழியை போராட்டக்காரர்களிடம் வழங்கினார். இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவரைப் பாதுகாப்பதில் கடமையுணர்வுடன் அரசு

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 11
மீனவர்களைப் பாதுகாப்புடன் கடலுக்கு அனுப்பும் பொறுப்பை நிறைவேற்ற அரசு கடமையுணர்வுடன் செயற்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 8ஆம் திகதி ஏற்பட்ட சுழல் காற்றில் சிக்கி உயிரிழந்த தென்பகுதி மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் நன்மை கருதி அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றுவது படகு உரிமையாளர்களின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

சுழல் காற்றில் சிக்கி 51 மீனவர்கள் உயிரிழந்ததோடு 8 பேர் காணாமல் போயுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)



# திஸ்ஸ விதாரணவின் அறிக்கையை அரசினால் பகிரங்கப்படுத்த முடியுமா?

### சவால் விடுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூலை 11
முதுகெலும்பும் தன்மானமும் இல்லாத சில விலைபோன தமிழ் பேசும் அரசியல்வாதிகளை வைத்துக் கொண்டு தெரிவுக் குழுவில் தமிழ்- முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருக்கின்றது என்று ஏமாற்ற வேண்டாம்.

பதிலாகத் துணிவும் நேர்மையும் கொஞ்சமாவது இந்த அரசுக்கு இருந்தால், திஸ்ஸ விதாரண குழுவினர் தயாரித்து ஜனாதிபதியிடம் கையளித்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசின் ஆலோசனை அறிக்கையை உடனடியாகப் பகிரங்கப்படுத்தி அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தட்டும் பார்க்கலாம். இவ்வாறு சவால் விடுத்துள்ளார். ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் கொழும்பில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடக மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு மனம் வைத்தால் நேற்றைய பயங்கரவாதி கூட நாளை வடமாகாண முதலமைச்சர் என்று சொல்லிக் கொள்ளலாம். இவர்கள் வடக்கின் முதலமைச்சராவதற்கு அரசு மனம் வைத்தால் மட்டும் போதாது மக்கள் மனம் வைக்க வேண்டும். முதலமைச்சரானாலும் ஆகாவிட்டாலும் முன்னாள் புலிகளாக இருந்து இந்நாள் சிங்கங்களாக மாறிவிட்ட இவர்களுக்குதார்மீகக்கடமை இருக்கின்றது. உங்களின் பொது ஆணைகளை ஏற்றுப் புலிகளுக்குத் தண்ணீர் தந்தார்கள், சாப்பாடு தந்தார்கள் என்று சிறைகளில் இன்று தமது வாழ்க்கையை தொலைத்துவிட்டு வாடும் சுமார் ஆயிரம் பேரை விடுவிப்பதுதான் இந்தக்கடமை.

தற்போது நடப்பதைப் பார்த்தால் முன்னாள் போராளிகள் திரட்டப்பட்டு வடக்கில் தயாமாஸ்ரர் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேலைகளுக்கு உள்வாங்கப்படுவது புலனாகிறது. இது புதிய ஆயுதக் குழுவா?

கற்றுக் கொண்ட ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் ஆயுதக் குழுக்களை அகற்றுவோம் என்று சொல்லிவிட்டு இன்று மீண்டும் நீங்களே ஆயுதக் குழுக்களை உருவாக்குகின்றீர்களா? வடமாகாண தேர்தல் வேலைகளில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக இந்தக் குழுக்களை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை வருகிறார், பொதுநலவாய மாநாடு வருகின்றது என்றதும் தூக்கத்திலிருந்து எழுந்த அரசு அவசர அவசரமாக மூதூர் படுகொலைகளை விசாரிக்கத் தொடங்கியுள்ளது.

திருகோணமலையில், தலையில் வெடிவைத்துபடுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் வழக்கு கோப்பை இப்போதுதான் தூசு தட்டி எடுத்து விசேட அதிரடிப் படையினர் சிலரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளது அரசு.

ஆணையாளர் நவிப்பிள்ளை வந்து போன பின்னர், பொது நலவாய மாநாடு முடிவடைந்த பின்னர் மீண்டும் இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு கோப்புகள் காணாமல் போய்விடும்.

இதனால்தான் சொல்கின்றோம் இந்த நாட்டில் நியாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றால் சர்வதேச கண்காணிப்பு அவசியம்.

நவநீதம்பிள்ளையை இந்த நாட்டுக்குள் வரவிட மாட்டோம் என்று சொன்னவர்கள் இன்று எங்கே? காணி, பொலிஸ் அதிகார திருத்தங்கள் இல்லாமல் வடக்குத் தேர்தலை நடத்த விடமாட்டோம் என்று சொன்னவர்கள் இன்று எங்கே?

இனிமேலாவது உலக நடைமுறையை உணர்ந்து பேசுங்கள். இறைமை என்றும் சுயாதிபத்தியம் என்றும் சொல்லிக் கொண்டு உள்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை நீங்கள் சிறுமைப்படுத்த முடியாது. இந்த நாட்டின் இறைமை, சுயாதிபத்தியத்தில் எமக்கும் பங்கு உண்டு என்றார். (த-5)

## பிரிட்டன் தூதரகத்துக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 11
கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்குக் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் தூதரகத்துக்கு ஏற்றவகையில் தன்னால் மனுவை விசாரிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் கட்டணத்தைச் செலுத்தாத பிரிட்டன் பிரஜையின் கடவுச்சீட்டை விடுவிக்குமாறு கோரிப் பிரிட்டன் தூதரகத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே நீதிவான் திலின கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த மனுவை நிராகரித்த நீதிவான், தூதரகத்துக்கு ஏற்ற வகையில் வழக்கை விசாரிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடவுச்சீட்டைக் கேட்டு உரிய நபர் மனுத் தாக்கல் செய்ய வேண்டுமே தவிர, தூதரகம் அல்ல என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டன்பிரஜையானஹெலன் ஜோன் 17,202 ரூபாவுக்கான கட்டணத்தைச் செலுத்தாது ஹோட்டலிலிருந்து வெளியேறிவிட்டதாகக் கொழும்பு கிரேன் ஓரியன்டல் ஹோட்டல் முகாமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹோட்டலிலிருந்து வெளியேறியவர் தனது கடவுச்சீட்டைத் தவறுதலாகக் ஹோட்டலிலேயே விட்டுச்சென்றுவிட்டார்.

அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைத்த பொலிஸார் அந்தக் கட்டணத்தைப் பிரிட்டன் தூதரகம் செலுத்தி விட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (த)

## 17 இலங்கை அகதிகள் கைது

கான்பரா, ஜூலை 11
ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற இலங்கை அகதிகள் பெண்கள், குழந்தைகள் உட்படப் 17 பேரை இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்ப முயன்ற முகவர்கள் உட்பட 2 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத்தை அடுத்த ஊத்துக்காட்டில் சந்தேகத்துக்கிடமாகச் சிலர் கடந்த 2 நாள்களாகத் தங்கி இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல்கிடைத்துள்ளது.இதைத் தொடர்ந்து வாலாஜாபாத் பொலிஸார் திங்கட்கிழமை இரவு ஊத்துக்காடு சென்று விசாரித்தனர். இதன்போது இவர்கள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள அகதிகள்முகாம்களைச்சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் என்பது தெரியவந்தது.

அவர்கள் சென்னை அல்லது கடலூரில் இருந்து கடல் வழியாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களைக் கைது செய்த பொலிஸார் காஞ்சிபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு பின்புறம் உள்ள பொலிஸ் சமுதாயக்கூடத்தில் தங்க வைத்தனர். (த)

## மயிலிட்டிப் பகுதி மக்களை அக்கரையில் குடியேற்ற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 11
மயிலிட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட மக்களை, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் அக்கரைப் பகுதியில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்துள்ளார்.

வலி.வடக்கின் மயிலிட்டி உள்ளிட்ட 23 கிராம சேவையாளர் பிரிவுகள் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசமாக உள்ளதுடன், அந்தப் பகுதிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகள் இராணுவத்தினரால் ஒருபோதும் விடுவிக்கப்பட மாட்டாது எனக் கூறப்படும் நிலையில் மயிலிட்டி மக்களில் ஒரு சிறு தொகுதியினரைக் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் அக்கரைப் பகுதியில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் கடந்த ஆண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்காகக் கடந்த ஆண்டு இடம்பெற்ற கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி கோரப்பட்டிருந்த போதும், அக்கரைப் பிரதேசத்தின் சிவன் கோயிலடைப்பு பகுதியைச் சேர்ந்த மக்கள் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் சிவன் கோயிலடைப்புப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிப்பதுடன், மயிலிட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட மக்களுக்கும் அக்கரைப் பகுதியிலே காணிகள் வழங்கிக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் இராணுவத்தினருடன் இணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

### மத்திய கிழக்குக்கு ஓகஸ்ட் முதல்

## பணிப்பெண்களை அனுப்பத் தடை

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களை அனுப்புவது தடைசெய்யப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



எனினும் வெளிநாடு செல்ல விரும்பும் பெண்கள் பயிற்றப்பட்டு வீட்டு உதவியாளர்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு அனுப்பப்படும் பெண்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டுத் தெளிவூட்டப்பட்டு அனுப்பப்படுவதோடு அவர்களின் பெயர்களும் மாற்றப்படும் என டிலான் பெரேரா குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் டிலான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடு செல்லும் இலங்கைப் பணிப்பெண்கள் அங்கு விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்தும் அதுபற்றி வெளியாகும் செய்தி குறித்தும் ரஞ்சன் ராமநாயக்க கேள்வி எழுப்பியபோது, அவை அனைத்தும் பொய்யான தகவல் என அமைச்சர் டிலான் பெரேரா பதிலளித்தார். (த)

## முன்னாள் பெண் போராளி சாவு

இராணுவத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பெண் போராளி ஒருவர் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். கந்தசாமி புவனேஷ்வரி (வயது 23) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார். கல்கிஸை பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இவர், அங்கு ஏற்பட்ட தீ விபத்து காரணமாக எரிகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். இந்தத் தீ விபத்துச் சம்பவம் கடந்த 20 தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணியில் நடைபெற்ற சுகாதாரக் கண்காட்சி



வடமராட்சி, ஜூலை 11
சுகாதாரம் மற்றும் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி நேற்று வரணி பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது. வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் ஜே.எஸ்.டி.எப். நிகழ்ச்சித் திட்ட அனுசரணையுடன் வரணி வடக்கு, வரணி தெற்கு, வரணி மத்தி, மந்துவில் மத்தி தாய்மார் கழகங்கள் ஆதரவில் இந்தக் கண்காட்சி இடம் பெற்றது.

வரணி பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி வீ. ஆறுமுகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் கலந்து கொண்டார்.

இந்தக் கண்காட்சியில் ஜீவ போசா மாவிலான உணவுத் தயாரிப்பு, கர்ப்பகால பராமரிப்பு, பிரசவத்துக்கு பின்னரான பராமரிப்பு, தாய்ப்பாலூட்டல், நிறை குறைந்த பிள்ளைகள் சார்பிலான விசேட உணவூட்டல், ஆரம்ப இளம் பிள்ளைப் பராய விருத்திக்கான செயற்பாடுகள், தடுப்பு மருந்து ஏற்றல், குடும்பத்திட்டமிடல், யௌவனப் பராய வனிதையர் பராமரிப்பு, வீட்டு விபத்துக்கள், சுயதொழில் ஊக்குவிப்பு, வீட்டுத்தோட்ட மாதிரி, குடும்ப வன்முறைகள் போன்ற 14 தலைப்புக்களில் காட்சிப் படுத்தலும் விளக்கங்களும் இடம்பெற்றன.

ஏராளமான குடும்ப மாதுக்கள், பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிட்டு பயனடைந்தனர். (வ-122)

# பட்டதாரி ஆசிரியர்கள் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி, ஜூலை 11
தேசிய ரீதியில் உள்ள அரச, தனியார் பாடசாலைகளில் கடமை புரியும் பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை பல்கலைக் கழகங்களில் உள் வாரி முழு நேரப் பாடநெறியாகப் பயில்வதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

இந்தப் பாடநெறி கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள மொழி மூலமும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிங்களமொழி மூலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலமும் நடத்தப்படவுள்ளது.

ஒருவருட கால சம்பளத்துடனான இந்தக் கற்கை நெறிக்கு பட்டதாரியான இலங்கைக் கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்திருப்பின் விண்ணப்பிக்க முடியும்.

கல்வியியல் கல்லூரி மூலம் டிப்ளோமாப் பட்டம் பெற்று, ஆசிரியர் நியமனம் பெற்றுப் பின்னர் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றோர் ஒப்பந்த அடிப்படையில் 5 வருட கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பவர் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

எழுத்துப் பரீட்சை அடிப்படையில் இடம்பெறவுள்ள தெரிவுகளுக்காக எதிர்வரும் 5 ஆம் திகதி வரை பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## தீருவில் பொதுப் பூங்கா ஆரம்ப நிகழ்வு

பருத்தித்துறை, ஜூலை 11
வல்வெட்டித்துறை நகர சபையின் தீருவில் பொதுப் பூங்கா ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நகராட்சி மன்றத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் இடம் பெற உள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் என்.இராஜநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார், மாவட்ட வன பரிபாலன அதிகாரி எஸ். யோகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-8-34)

## எச்.என்.பியின் ஆண்டு நிறைவு

வலி.வடக்கு, ஜூலை 11
ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையின் 10 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று காலை 7.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வங்கியின் வடபிராந்தியசிரேஷ்ட முகாமையாளர் க.இந்திரவாசன் கலந்து கொள்வார்.

வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் என 30 இற்கு மேற்பட்டோர் நிகழ்வையொட்டி யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்த தானம் வழங்கவுள்ளனர். (வ-86)

## 'வாழ்வின் எழுச்சி' திட்டத்தின்

# முதலாவது சந்தை தென்மராட்சியில்

தென்மராட்சி, ஜூலை 11
வாழ்வின் எழுச்சித் திட்டம் 'திவிநெகும' வின் விற்பனைச் சந்தையும் தகவல் மையமும் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நாவற்குழி அரச உணவுக் களஞ்சிய வளாகத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், யாழ். மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், வாழ்வின் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் வே.சுதர்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



அடிக்கல் நடுகிறார் அரச அதிபர்

இலங்கையில் முதன்முறையாக திவிநெகும விற்பனைச் சந்தையும் தகவல் மையமும் தென்மராட்சி சமுர்த்தி மகா சங்கம் ஊடாக அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# சிறுவர் பூங்காவுக்கான அடிக்கல் நடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 11
நகரை அழகு படுத்தும் திட்டத்தின் கீழ் யாழ். பழைய பூங்காவில் இரண்டாம் கட்டமாக சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்கும் நோக்கில் நேற்று புதன்கிழமை பூங்காவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையின் கோரிக்கைக்கு அமைய வடக்கு மாகாண சபை இதற்கென ரூபா இருபது மில்லியன் நிதி வழங்கியுள்ளது.

நவீன வசதிகள் கொண்டதாக இந்தச் சிறுவர் பூங்காவை அமைக்கும் பணிகள் மூன்று மாதங்களுள் பூரணமாக நிறைவேற்றப்படவுள்ளன.

சிறுவர் பூங்காவுக்கான அடிக்கல்லை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நட்டனர். (வ-7)

# மூட்டு வாதக் கிளினிக் நேரத்தில் மாற்றம்

தென்மராட்சி, ஜூலை 11
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வரும் மூட்டுவாத கிளினிக் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் மாலை நேரத்தில் நடத்தப் படவுள்ளது.

கிளினிக்குக்கு வரும் நோயாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை காலை வைத்தியசாலை மேல்மாடியில் நடத்தப்பட்டு வந்த மூட்டு வாத கிளினிக் அடுத்த மாதம் தொடக்கம் மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க் கிழமை பி.ப. ஒரு மணிக்கு வைத்தியசாலை கிளினிக் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கிளினிக்குக்கு தூர இடங்களிலிருந்து வருவோரின் நலன்கருதியும், நோயால் பாதிக்கப்பட்டுள்ளோர் மேல்மாடியில் நடைபெறும் கிளினிக் இடத்துக்கு படிகளில் ஏறிவருவதில் ஏற்படும் சிரமங்களையும்கருத்தில்கொண்டு கிளினிக் மண்டபத்தில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஓகஸ்ட் மாதத்துக்குரிய மூட்டுவாத நோய் கிளினிக் ஓகஸ்ட் 13 ஆம் திகதி நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தவறணைகளை மூடக் கோருவதால் தொழிலாளர்கள் கவலை

வலி.வடக்கு, ஜூலை 11
யாழ். மாவட்டத்தில் உள்ள கள்ளுத் தவறணைகளை மூடிவிடுமாறு பல இடங்களிலும் பொது மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக குறித்த தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

1995 ஆம்ஆண்டு இடப் பெயர்வைத் தொடர்ந்து பல இடங்களிலும் தொழில் செய்த பலர் இடப் பெயர்வு காரணமாக தொழிலை இழந்துள்ளதுடன் தற்போது வேறு கூலித் தொழிலுக்குச் செல்லும் நிலமைக்கு உள்ளாகியுள்ள நிலையில் அண்மைக்காலமாக பல இடங்களிலும் கள்ளுத் தவறணைகளை மூட வேண்டும் என்ற கோரிக்கையை பொது மக்கள் முன்வைத்து வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக தனிமையான பகுதிகளில் கள்ளுத் தவறணைகள் இயங்கி வந்த போதும் அண்மைக்காலத்தில் உருவான புதிய குடியேற்றங்கள் காரணமாக சனநெருக்கமுள்ள இடங்களிலும் இவை இயங்க நேர்ந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப் படும் மதுபானங்கள் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் நிலையில் யாழ்ப்பாணத்தில் தொழில் முயற்சியை வழங்கும் ஒரு தொழிலை அழிப்பதற்கு எம்மவர்களே முயல்வதாகவும் குற்றம் கூறப்படுகின்றது.

இத்தகைய நெருக்கடியான நிலையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும் என்பது சமூக ஆர்வலர்கள் முதல் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் கருத்தாகும்.

இது தொடர்பாக சங்க முகாமையாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டபோது அதனை உடனடியாக மாற்றம் செய்ய முடியாது எனவும் காலப்போக்கில் இதனை கருத்தில் கொண்டு நவீனமயப் படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் தொவித்தார். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் புஸ்பநாதன்

(நிர்வாக உத்தியோகத்தர், சுகாதாரத்திணைக்களம்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் புஸ்பநாதன் நேற்று (10.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -கனகாம்பிகை தம்பதியரின் அருமை மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், யாழினி (ஆசிரியை அ.மி.த.க பாடசாலை, சங்கானை), சதாநந்தன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சன், சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், துவாரகன், மாதங்கன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், பத்மநாதன், தியாகராசா, ஞானலக்சுமி மற்றும் இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, விஜயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணா நந்தன், காலஞ்சென்ற கமலாவதி மற்றும் லீலாவதி (ஆசிரியை, பாலர் பாடசாலை), மாணிக்கவாசகர் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கனகரட்ணம், குலசிங்கம், அன்னலக்சுமி மற்றும் சரஸ்வதி, நவரட்ணம், தாட்சாயினி, சாந்தி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2013) வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதர்சங்க வீதி,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

'13ஆவது அரசியல் யாப்பும் யதார்த்தமான சில உண்மைகளும்' என்ற நூல் இன்று மு.ப. 11 மணிக்கு லக்ஸ் விருந்தினர் விடுதியில் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் முதற்பிரதி, இந்தியத் துணைத் தூதரக பிரதித் தூதுவர் வி.மகாலிங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக நூலாசிரியரும், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளருமான சி.மோகன் அறிவித்துள்ளார்.

(த-5)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.தட்டாதெருச் சந்தியை அண்மித்து இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் மூர்ச்சையாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த தனியார் நிறுவன விற்பனைப் பிரதிநிதியான சண்முகலிங்கம் கோபிநாத் (வயது-20) என்பவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(த-4)

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச நடத்துனர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (09.07.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.30, சந்தையடி கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய். T.P_0213210203

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



கலாபூசணம் செல்லப்பா நடராசா (J.P)

(முன்னாள் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை தலைவர்)

கடந்த 08.07.2013 அன்று இறைபதம் அடைந்த செல்லப்பா நடராசா அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நெட்டிலிப்பாய் பிள்ளையாரை இறைஞ்சுகின்றோம்.

நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலய பரிபாலண சபையினர்களுடன்
ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தினர்.

(30768)

## 31 ஆம் நாள் நினைவு கூரல்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **கனகேஸ்வரி கதிர்காமநாதன்**
அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் தியாகேசு கனகசபாபதி

(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர்)

அவர்கள் கடந்த 11.06.2013 சிவபதம் அடைந்தார்.

அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், வரணி

(38000)(40.8)

## இரங்கல்



மறைந்தும் மறையாத மாமனிதர் என்ற பெருமையுடைய

### செல்லப்பா நடராஜாவின்

குடும்பத்தினருக்கு

அருமை அப்பா, ஆசைமாமா, அன்புத் தாத்தாவை இழந்து தவிக்கும் அன்பு நெஞ்சங்களுக்கு, எமது ஆற்றுப்படுத்தும் வார்த்தைகள் கிஞ்சித்தும் ஆறுதல் தரமாட்டா இருப்பினும், அவர் உங்களுடன் வாழ்ந்த காலத்தே தொட்டுவிட்ட பணிகளைத் தொடர்வதற்கு உங்களை இவ்வையகத்தே, விட்டுச் சென்றுள்ளாரென்பதை நினைத்து சற்றே மன ஆறுதல் அடைவோமாக.

நெட்டிலைப்பாய் வாழ் மேலைக்கரம்பனூர்
ஸ்ரீபதி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி தவயோகேஸ்வரி சண்முகநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தவயோகேஸ்வரி சண்முகநாதன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - கச்சேரி, பிரதேச செயலகம் நல்லூர், சாவகச்சேரி) 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - யோகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற S.S. சண்முகநாதனின் அன்பு மனைவியும், தர்சி (ஆசிரியர் - யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), சிந்துஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சதீஷ்குமாரின் (HNB - வேலணை) மாமியும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் நிமலதாஸ் (லண்டன்), தனலட்சுமி (பேபி, கனடா), தனபாக்கியம் (ராணி - கனடா), லீலா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, தியாகராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - இலங்கை மின்சாரசபை), செல்வராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - மக்கள் வங்கி) சோதிராசா (பிரான்ஸ்), சத்தியசீலன், இரங்கநாதன் (லண்டன்), கனகலிங்கம் (கனடா), தயாளசீலன் (கனடா), கேதீஸ்வரன் (லண்டன்), கமலேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வினுஷயன், லக்ஷ்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.021 222 1913

(30739)(6.3.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை)



மீசாலை மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நல்லம்மா நேற்று (10.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பு -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி- பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், சியாமளனின் (லண்டன்) அன்புத் தாயும், காலஞ்சென்ற சின்னப்பு நல்லதம்பி, தாமோதரம்பிள்ளை, கிருஷ்ணசாமி மற்றும் தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பேரம்பலம் (ஆசிரியர்), சரஸ்வதி, வீரசிங்கம், தியாகராசா, தவமணி (கொழும்பு), வன்னிய சிங்கம், நவரத்தினம், செல்வநாயகி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
கேணியடி,
மீசாலை.

தகவல்:
பொன்னம்பலம் (கணவர்)
T.P- 0778496661

## கண்ணீர் அஞ்சலி

எமது மாணவியும் வைத்தியருமான பா.சக்திகா அவர்களது அன்புப் பேர்த்தி

### சின்னத்துரை செல்லம்மா

அவர்கள் காலமானதையிட்டு அஞ்சலி தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறை வனைப் பிராத்திப்பதோடு நேரில் செல்லமுடியாத நிலையில் Dr.சக்திகா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்து துயர் பகிர்கின்றோம்.

கலட்டி அம்மன் வீதி,
கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

Dr. ஜெ. ஜெயலன்
Dr. ச. ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை

## மரண அறிவித்தல்



### கோபாலகிருஷ்ணன் விக்கினேஸ்வரன்

மாலிசந்தி அல்வாயைப் பிறப்பிடமாகவும், சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலகிருஷ்ணன் விக்கினேஸ்வரன் கடந்த 04.07.2013 வியாழக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா கோபாலகிருஷ்ணன்- நவமணி தம்பதியரின் அன்பு மகனும், கண்ணதாசன் (வைஷ்ணவி நகை பூங்கா-நெல்லியடி), இராஜ்குமார் (பிரான்ஸ்), புருசோத்தமன் (பிரதேச செயலகம், கரவெட்டி), அமுதா (கால்நடை வைத்தியர், அலுவலகம், கண்டாவளை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌசலா, மதிவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2013) வியாழக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாலிசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

(37638) (10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவாடு பதனிடும் இரு நிலையங்கள் கையளிப்பு

## இம்மாத இறுதியில் பயனாளிகளிடம்




யாழ்ப்பாணம், ஜூலை 11
பாசிக் நிறுவனத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் 4 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இரண்டு கருவாடு பதனிடும் நிலையங்கள் இந்த மாத இறுதியில் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன என்று பாசிக் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மிட்சிக்கோ இஷிமோறி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்காலச் சூழல் மற்றும் இயற்கை இடர்களால் வடமராட்சிப் பிரதேச மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதால் அப்பகுதி குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு தொழில் முயற்சியாக கருவாடு பதனிடல் செய்து விற்பனை செய்வதற்கான பயிற்சிகளை கிராம ரீதியாக பாசிக் நிறுவனம் வழங்கி வருகின்றது.

இந்த நிலையில் இவர்களது தொழில்முயற்சிகளை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் நிரந்தரமான ஒரு நிலையத்தின் ஊடாக அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக ஜெய்க்கா நிறுவனம் நிதி உதவி வழங்கியுள்ளதால் பாசிக் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு பதனிடும் நிலையங்களும் தலா 2 மில்லியன் ரூபா நிதியுதவியில் கட்டப்பட்டு வருகிறது.

கட்டைக்காடு, மணற்காடு ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டு வரும் கருவாடு பதனிடும் நிலையங்கள் மூலம் தற்போது பயனாளிகளாக இணைந்துள்ள 30 பேர் பயன்பெறமுடியும்.

தற்காலிக கட்டடத்தில் தற்போது தொழில் முயற்சிகளை மேற்கொண்டுவரும் பயனாளிகள் இந்த மாத இறுதியில் நிரந்தரக் கட்டடத்தை பயன்படுத்த முடியும். கட்டடத்தை அமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-14)

## மாவிட்டபுரம் ஆலய திருவிழா சனிக்கிழமை ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 11
வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் காம்யோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

இடம்பெறும் பெருவிழா வரிசையில் திருக்கார்த்திகை எதிர்வரும் 31 ஆம் திகதியும், தேர்த்திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

அத்துடன் விசேட நிகழ்வாக எதிர்வரும் 17ஆம் திகதி ஷண்முகர் திருநடனம் இடம் பெறவுள்ளது. (வ-14)

## கலகம் ஏற்படுத்தியோர் சமூக சேவையில்

யாழ்ப்பாணம், ஜூலை 11
குடித்து விட்டு போதையில் கலகம் விளைவித்த இரண்டு பேரை வைத்தியசாலைகளில் 5 வாரங்களுக்கு சமூக சேவை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவரும் வேலணையைச் சேர்ந்த ஒருவரும் குடித்து விட்டு ஊர்காவற்றுறையில் பிரதான வீதியில் கலகம் விளைவித்துள்ளனர். பொலிஸார் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதை அடுத்து ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நபரை ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் 3 வாரங்களுக்கு சமூக சேவையில் ஈடுபடுமாறும், வேலணையைச் சேர்ந்த நபரை வேலணை வைத்தியசாலையில் 2 வாரங்களுக்கு சமூக சேவை செய்யுமாறும் மன்று உத்தரவிட்டது. (த-4)

## ஏமாற்றுக்காரருக்கு விளக்கமறியல்



தென்மராட்சி, ஜூலை 11
வேலை பெற்றுத் தருவதாகக் கூறி தென்மராட்சிப் பிரதேசத்தில் பலரிடம் பணமோசடியில் ஈடுபட்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் திங்கட்கிழமை உத்தரவிடப்பட்டது.

வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஒருவரிடம் 37 ஆயிரம் ரூபாவும், மற்றொருவரிடம் 30 ஆயிரம் ரூபாவும் வேறொருவரிடம் ஆடைகளையும் வாங்கிவிட்டு நபரொருவர் தம்மை ஏமாற்றினார் என்று சம்பந்தப்பட்டவர்களால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கொழும்புத்துறைவாசியைக் கைது செய்து நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-9)

## பதனிடப்பட்ட இறாலுக்கு தென்னிலங்கையில் கிராக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்.மாவட்டத்தில் இருந்து மாதமொன்றுக்கு 300 கிலோகிராம் பதனிடப்பட்ட இறால் தென்னிலங்கைப் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

குறிப்பாக வேலணை பகுதியில் இருந்து இறால் கருவாடு ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலர் மீன் பதனிடும் நிலையம் ஊடாக பயனாளிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவை உள்ளூரில் விற்பனை செய்யப்படுவதை விட தென்னிலங்கைப் பகுதிகளில் அமோக விற்பனை இடம் பெறுகிறது. இதனால் தற்போது கருவாடு பதனீட்டாளர்களிடம் இருந்து பெறப்பட்ட இறால் கருவாடு மாதம் ஒன்றுக்கு 300 கிலோகிராம் எனும் ரீதியில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. காலநிலை மாற்றங்களால் கடலில் இறால் பிடிபடுவது குறைவாக இருக்கும் காலத்தில் ஏற்றுமதி குறைவாகவுள்ளது. எனினும் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 300 கிலோகிராம் இறால் ஏற்றுமதி செய்யக் கூடியதாகவுள்ளது. (வ-14)

## தலைமறைவானார் சாமியார்

### தேடி அலைகின்றனர் பக்தர்கள்

தென்மராட்சி, ஜூலை 11
சாவகச்சேரி வடக்குப் பகுதியில் கடந்த மூன்று மாதங்களாக அருள்வாக்கு கூறிய சாமியார் திடீரென தலைமறைவானார். இதனால் விசேட பூசைகளுக்கு பணம் கொடுத்த பக்தர்கள் சாமியாரைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி வடக்குப் பகுதி காணி ஒன்றில் சாமியார் ஒருவர் அருள்வாக்குச் சொல்வதை அறிந்த பக்தர்கள் தினமும் பெருமளவில் குவிந்தனர். ஒருவருக்கு அருள்வாக்கு சொல்வதாயின் 500 ரூபா செலுத்த வேண்டும். அருள்வாக்குச் சொல்லும் போது விசேட பூசை செய்வதாயின் 10 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை கட்டணமாக அறவிடப்பட்டு திகதிகள் வழங்கப்பட்டன. கடந்த மூன்று மாதங்களாக அருள்வாக்குச் சொல்லும் படலம் நடைபெற்று வந்தது.

**"இரவு வேளைகளில் இடம்பெறும் விசேட பூசைகளின் போது சாமியார் பெண்களிடம் சில்மிஷ பூசைகளும் நடத்தியுள்ளார் என்று தகவல் வெளியாகியன.**

இரவு வேளைகளில் இடம்பெறும் விசேட பூசைகளின் போது சாமியார் பெண்களிடம் சில்மிஷ பூசைகளும் நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியன. இதனை அறிந்த இளைஞர்கள் அவரது நடவடிக்கைகளை கண்காணிக்கத் தொடங்கியதுடன் அச்சுறுத்தல்களையும் விடுத்திருந்தனர்.

இதனால் ''இன்று எவருக்கும் அருள்வாக்கு கூறப்பட மாட்டாது என அறிவித்தல் பலகை தொங்கவிட்ட சாமியார் அன்றைய தினம் இரவோடிரவாக தலைமறைவானார். இதனை அறிந்த காணி உரிமையாளர் காணிக்குள் எவரும் செல்லமுடியாதவாறு முட்கம்பி வேலி அமைத்துள்ளார். (வ)

## கொடிகாமம் பரிசோதனை முகாமில் இனங்காணப்பட்ட நீரிழிவு நோயாளர்



யாழ்ப்பாணம், ஜூலை 11
கொடிகாமத்தில் நடத்தப்பட்ட நீரிழிவு பரிசோதனை முகாமில் ஐந்து புதிய நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக அனுசரணையுடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் நீரிழிவு பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இவர்களில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 73 பேரில் ஐந்து பேருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு தொடர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தலைமையிலான வைத்தியக்குழுவினர் பரிசோதனை முகாமை நடத்தினர். (ஒ-9)


## பிரதேச செய்தியாளர்கள்

★ தெல்லிப்பழை
★ சுன்னாகம்
★ ஏழாலை
★ சண்டிலிப்பாய்
★ இளவாலை
★ பண்டத்தரிப்பு
★ இணுவில்
★ புன்னாலைக்கட்டுவன்
★ உரும்பிராய்
★ திருநெல்வேலி
★ கோப்பாய்
★ நீர்வேலி
★ புத்தூர்
★ கல்வியங்காடு
★ புங்குடுதீவு
★ ஊர்காவற்றுறை
★ வல்வெட்டித்துறை
★ உடுப்பிட்டி
★ தொண்டமானாறு
★ நாகர்கோவில்
★ தாளையடி
★ இயக்கச்சி
★ மிருசுவில்

தேவை

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு பிரதேச செய்தியாளர் களாகப் பணியாற்ற விரும்புவோர் தமது சுய விவரங்களை editor @ uthayan.com என்ற – மின் அஞ்சல் முகவ ரிக்கோ அல்லது உதயன் வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை மனு நிராகரிப்பு குறித்து விளக்க வேண்டிய தேவையில்லை

## ரஜிவ் கொலைக் குற்றவாளிகள் தொடர்பாக மத்திய தகவல் ஆணையம் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 11

முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜிவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது வேலூர் சிறையில் இருக்கும் பேரறிவாளனின் கருணை மனு இந்திய குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்களை மத்திய அரசு வெளியிட வேண்டிய தேவையில்லை என்று மத்தியத் தகவல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கருணை மனுக்கள் குறித்த மத்திய அமைச்சரவையின் பரிந்துரைகளுக்கு தகவலறியும் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

எனவே பேரறிவாளன் தனது கருணை மனு நிராகரிக்கப்பட்டமை குறித்த விவரங்கள் அளிக்கப்பட்டேயாகவேண்டும் என்று வற்புறுத்தமுடியாது என்றும் ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இதுகுறித்து மத்தியத் தகவல் ஆணையத்தின் ஆணையாளர் சுஷ்மா சிங் கூறும்போது,

''ரஜிவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்த நீதிபதி, ஜெயின் ஆணையத்தின் பரிந்துரைகளின்படி உருவாக்கப்பட்ட பல்முனை கண்காணிப்பு முகாமையின் அறிக்கை பேரறிவாளனுக்குத் தரப்படலாம். அதே நேரம் அந்த அறிக்கையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அதிகாரத்திற்குட்பட்டது இல்லை எனும் பட்சத்தில் அது குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் தெளிவுபடுத்தவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

அண்மையில் பேரறிவாளன் தனது கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் குறித்த விவரங்களைக் கோரியிருந்தார். அது குறித்து விசாரணை செய்த மத்திய தகவல் ஆணையம் இப்போது தனது தீர்ப்பினை வழங்கியுள்ளது. (ற)

## ஊடுருவல் விடயத்தில் மத்திய அரசு நாடகம்




புதுடில்லி, ஜூலை 11

இந்திய எல்லைக்குள் சீனா ஊடுருவுவது குறித்த விடயத்தில் இந்திய மத்திய அரசு நாடகம் ஆடுகின்றது என்று பாரதிய ஜனதாக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் லடாக் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவிய விடயம் மத்திய அரசால் மூடிமறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அந்தக் கட்சி மத்திய அரசு அனைத்துத் துறைகளிலும் முடங்கியுள்ளதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுக்கின்றது என்றும் கூறியுள்ளது.

சீனாவின் அத்துமீறலுக்கு இந்தியாவும் அதேபாணியில் பதிலளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர் யஸ்வந்த சின்ஹா, மத்திய அரசின் போக்கால் இந்திய இராணுவம் மன அளவில் ஊக்கமின்றி காணப்படுகின்றது என்று பாதுகாப்பு விவகார நிபுணர் பரத் வர்மா கூறியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது சீனாவின் வழக்கமான அத்துமீறல்தான் என்று மத்திய அரசு கூறக்கூடும் என்று கிண்டல் செய்துள்ள சின்ஹா, ''இந்தியாவின் பாதுகாப்பு பலவீனமாக இருக்கின்றது. இந்தியாவால் எதுவுமே செய்ய முடியாது என்பது சீனாவின் நடவடிக்கைகளிலிருந்து தெரிகின்றது. இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடந்த பின்னரும் சீனப்பிரதமருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பைக் கொடுத்தது இந்தியா. ஆனால் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் சீனா சென்றபோது, இந்தியா ஒழுங்காக நடக்க வேண்டும் என்று மிரட்டியுள்ளார் அந்நாட்டு இராணுவத் தளபதி'' என்றும் சின்ஹா கடுமையாகச் சாடியுள்ளார். (ற)



குஜராத்தில் புகழ் பெற்ற ஜெகன்னாதர் ஆலயத்தின் 136ஆவது ரதயாத்திரை நேற்று ஆரம்பமாகியது. அதில் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி கலந்து கொண்டார்.

### புத்தகயா குண்டு வெடிப்பு

## துப்புக் கொடுத்தால் ரூபா 30 இலட்சம்

புத்தகயா, ஜூலை 11

பீகாரின் புத்தகயா மகாபோதியில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகள் தொடர்பாகத் தகவல் வழங்குவோருக்கு ரூபா 30 இலட்சம் சன்மானம் வழங்கப்படும் என்று இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு அறிவித்துள்ளது.

மகாபோதியில் கடந்த 7 ஆம் திகதி அதிகாலை 9 தொடர் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றன. அதில் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது. எனினும் குண்டுவெடிப்புக் குறித்து உருப்படியான தடயங்கள் எதுவும் அவர்களிடம் சிக்கவில்லை. இந்த நிலையில் இந்தச் சம்பவம் குறித்து தகவல் வழங்குவோருக்கு ரூபா 30 இலட்சம் சன்மானம் அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளதுடன், தகவல்கள் வழங்குவோரின் விவரங்கள் மிக இரகசியமாகப் பேணப்படும் என்றும் கூறியுள்ளது தேசிய புலனாய்வு அமைப்பு.

அதேவேளை, இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இந்தியன் முஜாகிதீன் என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது. (ற)

## தண்டனை பெற்றால் பதவிகள் பறிக்கப்படும்

புதுடில்லி, ஜூலை 11

கிரிமினல் வழக்குகளில் சிறை தண்டனை பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ள உயர்நீதிமன்றம், கிரிமினல் வழக்குகளில் அவர்கள் தண்டனை பெறுவது பதவி நீக்கம் செய்யப்படுவதற்குச் சமமானது என்றும் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிரிமினல் வழக்குகளில் தண்டனை பெறும் பட்சத்தில் அவர்கள் உடனடியாக பதவி நீக்கப்பட்டனர் எனறே கருதப்படவேண்டும் என்று தெரிவித்துள்ள உயர்நீதிமன்றம் நீதிமன்ற தீர்ப்பு வெளியானவுடன் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. (ற)

# தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கூறுகின்றார்

புதுடில்லி, ஜூலை 11

இலங்கைக் கடற்படை மற்றும் இருநாட்டு மீனவர் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுகள் நடத்தி தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு இந்திய மத்திய அரசு விரைவில் தீர்வு காணும் என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.




இதுகுறித்து அவர் கருத்து வெளியிடும்போது,

''தமிழக மீனவர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரை மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இலங்கை அதிகாரிகள், இலங்கை மீனவ பிரதிநிதிகள் மற்றும் தமிழக மீனவ சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுகளை நடத்தி ஒரு சுமுக சூழல் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகின்றது.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்கள் மீதும் இலங்கை அரசு வழக்குப் பதிவு செய்துள்ளது. அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். விரைவில் தமிழக மீனவர்களின் பிரச்சினை மத்திய அரசால் தீர்த்து வைக்கப்படும்'' என்றார்.

அதேவேளை சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக அவர் கூறும்போது,

''சேது சமுத்திரத் திட்டம் தமிழகத்துக்கு மட்டுமன்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த திட்டம் என்பதால் பிரதமர் மன்மோகன்சிங் நேரடியாக வந்து அந்த திட்டத்தைத் ஆரம்பித்து வைத்தார்.

தற்போது தொடர்ந்து அதனை நிறைவேற்றுவதற்கான பணிகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. எனினும் குறித்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தமிழக அரசே இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

எனினும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது'' என்று தெரிவித்தார். (ற)

## பதவி விலக முடியாது

### சாண்டி சண்டித்தனம்

திருவனந்தபுரம், ஜூலை 11

சூரியகல ஊழல் தொடர்பாக கேரள முதல்வர் உம்மன் சாண்டி பதவி விலக வேண்டும் என்று இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தி வருவதுடன் போராட்டங்களையும் நடத்தி வருகின்றன. அதனால் கேரளாவின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் பதவி விலகுவதற்கு மறுத்துள்ள சாண்டி, ''சில தவறுகள் நடந்திருக்கலாம். அது குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்படும்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்கள் துஷ்பிரயோகம்: வத்திக்கானிடம் ஐ.நா. விளக்கம்



ஜெருசலேம், ஜூலை 11

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் மதகுருமாரால் சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பான ஆயிரக்கணக்கான விவகாரங்கள் குறித்த விவரங்களை தருமாறு வத்திக்கான் திருச்சபையை ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது.

ஐ.நாவின் முன்பாக இது விடயமாக வத்திக்கானின் பிரதிநிதிகள் முன்னிலையாகி பதிலளிப்பதற்கு 6 மாதங்கள் இருக்கும் நிலையில், சிறார் உரிமைகள் குறித்த ஐ.நா. சாசனத்தை நடைமுறைப்படுத்தும் ஐ.நாவின் குழு இந்த விவரங்களை கேட்டுள்ளது.

சிறார் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக வத்திக்கான் திருச்சபை பெரும் சிக்கலை எதிர்கொண்டிருந்தது. சிறார் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன என்ற தகவல்கள், ஏதாவது ஒரு சந்தர்ப்பதில் இவை குறித்த முறைப்பாடுகள் வெளிவராமல் தடுக்கப்பட்டுவதற்கான நடவடிக்கையா என்பது குறித்தும் ஐ.நா. சபை ஆராய்கின்றது.(ற)

# அச்சுறுத்தல்களுக்கு அடிபணியக் கூடாது

## புகலிடம் கோருவோரை திருப்பியனுப்புமாறு ஆஸி. எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

மெல்பேர்ன், ஜூலை 11

உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாக புகலிடக் கோரிக்கையாளர்கள் விடுக்கும் அச்சுறுத்தலுக்கு அடிபணியக் கூடாது என்று ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ரோனி அபொட் கூறியுள்ளார்.


கடந்த வாரம் சிங்கப்பூரை மையமாகக் கொண்ட வணிகக் கப்பல் மூலம் ஆஸிக்குச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர்கள் 36 பேரை திருப்பி அனுப்ப முயன்றபோது, அவர்கள் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக அச்சுறுத்தியிருந்தனர். அதையடுத்து அவர்களை கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்து வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று ஆஸ்திரேலிய அரசு தெரிவித்திருந்தது.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு காட்டமாக கருத்து வெளியிட்டுள்ளார்.

''ஆஸ்திரேலியாவை அச்சுறுத்தி புகலிடக் கோரிக்கையைப் பெற நினைக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசு தயவு தாட்சணியம் காட்டக் கூடாது. புகலிடக் கோரிக்கையாளர்கள் விடுக்கும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியக் கூடாது. ஆள்கடத்தல்காரர்கள் மற்றும் அவர்களின் வாடிக்கையாளர்களது சாகசங்களுக்கு ஆஸி. அரசு ஏமாறக்கூடாது'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## இன்னும் சில நாள்களில் எகிப்தில் புதிய அரசமைப்பு



கெய்ரோ, ஜூலை 11

எகிப்தில் இன்னமும் சில நாள்களில் புதிய அரசிசமைப்பு உருவாக்கப்படும் என்று இடைக்கால ஜனாதிபதி அட்லி மன்சூர் அறிவித்துள்ளார்.

எகிப்தில் அரசியல் நெருக்கடிகள் மிகவும் தீவிரமடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மொஹமட் முர்சியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்த்தரப்பாளர்களுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தநிலையிலேயே மன்சூரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

''அரசமைப்புத் தொடர்பில் மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படும்.

அதன்பிரகாரம், அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் எகிப்தில் தேர்தல் நடத்தப்படும்'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



சீனாவின் சிக்குவான் மாகாணத்தில் கடும் மழை பெய்து வருகின்றது. அங்குள்ள குவாதகன் நகரத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் காரணமாக நகரின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க சிறைகளில் கட்டாய கருத்தடை

நியூயோர்க், ஜூலை 11

அமெரிக்கச் சிறைகளில் பெண் கைதிகள் பலவந்த கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்ற திடுக்கிடும் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

கலிபோர்னியா சிறையில் தண்டனை அனுபவித்து வந்த 148 பெண் கைதிகளை வற்புறுத்தி அவர்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

2006 தொடக்கம் 2010 ஆண்டு வரையான 5 ஆண்டுகளில் மட்டும் சவுசில்லாவில் உள்ள வேல்லி பெண்கள் சிறையில் இருந்த கைதிகளுக்கும், கரோனாவில் உள்ள சிறை கைதிகளுக்குமே இந்த கட்டாய கருத்தடை செய்யப்பட்டுள்ளது என்றும், தண்டனைக்காக சிறைக்கு வந்த பெண்களில் கர்ப்பிணியாக இருந்த பெண்களுக்கும் கருத்தடை செய்யப்பட்டது என்று ஆதாரங்களுடன் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இவ்வாறான சத்திர சிகிச்சைகளைச் செய்வதற்காக மாநில அரசிடம் இருந்து சிறைத் துறையினர் எந்த முன் அனுமதியையும் பெறவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (ற)

## மலைகளை ஆராய்கிறது கியூரியோசிட்டி

நியூயோர்க், ஜூலை 11

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்து வரும் கியூரியோசிட்டி ரோவர் கலம் தற்போது அங்குள்ள மலைப் பகுதிகளை ஆராயும் பணிகளை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கான சூழ்நிலை உள்ளதா என்பதை ஆராயும் முயற்சியில் நாசா ஈடுபட்டுள்ளது. அதற்காக ரோவர் விண்கலத்துடன் கியூரியோசிட்டி ரோவர் கலம் அனுப்பி வைக்கப்பட்டது.

பல்வேறு வகையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் இந்த ரோவர் கலம் தற்போது முதன்முறையாக மலைப்பகுதியை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளது.

கிளெனெல்க் என்ற இடத்தை ஆராய்ந்த இந்த ரோவர் கலம், அங்கு பழங்காலத்தில் ஈரப்பதமும், நுண்ணுயிர்கள் வாழ்வதற்கான சூழ்நிலையும் இருந்துள்ளதைக் கண்டறிந்துள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். தொடர்ந்து பல்வேறு இடங்களில் ஆய்வு செய்த கியூரியோசிட்டி ரோவர், ஷார்ப் என்று பெயரிடப்பட்டுள்ள மலைப் பகுதியின் அடிவாரத்தை இப்போது அடைந்துள்ளது.

மலைப் பகுதியில் பல்லாயிரம் ஆண்டுகளாக சுற்றுச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து கியூரியோசிட்டி ரோவர் ஆராய உள்ளது என்று நாசா தெரிவித்துள்ளது. (ற)



## 280 கோடி ஆண்டுகளில் மூட்டைப் பூச்சிக்கே பூமி

லண்டன், ஜூன் 11

பொதுவாக சண்டை பிடிக்கும்போது உன்னை மூட்டைப்பூச்சி மாதிரி நசுக்கி விடுவேன் என்று கூறுபவர்கள் இனிமேல் அவ்வாறு கூற முடியாது. ஏனெனில் உலகம் அழியும் நிலைமை உண்டாகி அனைத்து உயிரினங்களும் அழிந்தாலும், கடைசியாகத் தான் மூட்டைப்பூச்சி அழியும் என்று ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்றது.

இதுகுறித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்ட செயின்ட் ஆண்ட் ரூஸ் பல்கலைக்கழக வானவியல் உயிரின நிபுணர் ஜோக் ஓ மல்லே ஜேம்ஸ் வியக்க வைக்கும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

''உலகில் கடைசி வரை தாக்குப்பிடித்து வாழக்கூடிய சக்தி மூட்டைப்பூச்சிக்கு மட்டுமே உண்டு. இன்னும் 280 கோடி ஆண்டுகளில் உலகம் அழியும். அப்போது, உலக வெப்பமயமாதல் காரணமாக சூரியனிடம் இருந்து மிக கடுமையான வெப்பம் பூமியை தாக்கும். அதன் மூலம் ஏற்படும் இரசாயன மாற்றம் காரணமாக ஒக்சிஜனின் அளவு குறைந்து காபனீரொக்சைட் அளவு விகிதம் அதிகரிக்கும். அதனால் தாவரங்கள், மிருகங்கள் உள்ளிட்ட உயிரினங்கள் படிப்படியாக அழிந்து போகும்

ஆனால், மூட்டைபூச்சிகள் மட்டுமே கடைசி வரை உயிர் வாழும். ஏனெனில் இவை நீரின்றியும், அதிக வெப்ப சக்தியை தாங்கியும் வாழக் கூடிய உயிரினமாகக் காணப்படுகின்றது'' என்று தெரிவித்துள்ளார் ஜோக். (ற)



## வெனிசுவேலாவில் தஞ்சம் முடிவெடுத்தார் ஸ்நோடன்



மொஸ்கோ, ஜூலை 11

அமெரிக்காவின் உளவு ரகசியங்களை வெளியிட்ட எட்வேர்ட் ஸ்நோடன் வெனிசுவேலாவில் தஞ்சமடைய உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவால் தேடப்படும் நபரான ஸ்நோடன் ரஷ்யாவின் சிரிமெத்யோவ் விமான நிலையத்தில் ஜூன் 23ஆம் திகதி முதல் தங்கியுள்ளார்.

இந்தநிலையில் அவருக்கு அரசியல் அடைக்கலம் தரத் தயாராக இருப்பதாக வெனிசுவேலா அறிவித்திருந்தது.

அதுகுறித்து மௌனம் காத்து வந்த ஸ்நோடன் தற்போது வெனிசுவேலாவின் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று ரஷ்யா வெளியுறவு விவகாரங்களுக்கான குழு தெரிவித்துள்ளது.

எனினும் ஸ்நோடனை எவ்வாறு வெனிசுவேலா தொடர்பு கொண்டது என்ற தகவலையும், அவர்களது அழைப்பை எப்படி ஸ்நோடன் ஏற்றுக் கொண்டார் என்பது குறித்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, ஸ்நோடனுக்கு எந்த ஒரு நாடும் அடைக்கலம் தரக் கூடாது என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

வெற்று சிமெந்து பைகள் விற்பனைக் குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8.00 தொடக்கம் மாலை 4.00 வரையில் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ருலின்ஸ் பிறைவேற் லிமிடெட்,
இல.08, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 567 1035 (30769)(6.11)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த

**Koyo**
Value & Technology MADE IN JAPAN

KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
எப்பொழுதும் நாம் உங்களுடன் (சி/10318)(5.)

**ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD**
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உடையார்கட்டு முல்லைத்தீவைச் சேர்ந்த

**ஆண்டியையா புவனேஸ்வரன்**

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 03.07.2013 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நிதிபதி மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். இவர் இப் பதவி மூலம் சிறந்த சமூக சேவைகள் செய்ய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (30748)(3.6.11) உறவினர்கள்.

## அமரர் அதிபர் மணியம் கணபதிப்பிள்ளை

அவர்களின் 6ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக அவர்களிடம் கல்வியயின்ற மாணவர்களால் நடத்தப்படும்

### மாபெரும் துடுப்பாட்டப் பெருவிழா

"பருத்தி நகரின் பெரும் சமர் 2013"




மின்னொளியில்

வடமராட்சி புகழ் துடுப்பாட்ட ஜாம்பவான்கள்
பருத்திநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மற்றும்
தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்
நேருக்கு நேர் சங்காரமிடும் வடமராட்சி ஜாம்பவான்களின் மகாயுத்தம்

"பருத்தி நகரின் பெரும் சமர் 2013"

12-07-2013 வெள்ளிக்கிழமை மாலை 6.31 மணி முதல் தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டரங்கில் அமரரின் பழைய மாணவனும், கௌரவ வவுனியா மாவட்ட நீதிபதியுமாகிய உயர்திரு விநாயகமூர்த்தி ராமக்கமலன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கும் பிரமாண்டத் திருவிழா. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட முன்னாள் பீடாதிபதி உயர்திரு மாணிக்கம் நடராஜசுந்தரம் அவர்கள் அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த வாழ்நாள் சாதனையாளர் விருது "யாழ். மாவட்டம் கண்ட துடுப்பாட்ட ஜாம்பவான்" வழங்கி அதியுயர் சிறப்புக் கௌரவம் பெறுகின்றார் என்பதைப் பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

அனைத்துத் துடுப்பாட்ட ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை :- உதயன் (C/10243)(2.6.3) "விழா அழைப்புக்குழு"

## முதலி அம்மாள் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம்
## MUTHALEE AMMAL DAY CARE CENTRE

**முகவரி:**
இல. 1016, திருநகர் வீதி,
திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

2 + வயது தொடக்கம் பாடசாலை செல்லும் வரை உங்கள் குழந்தைகளை சிறந்த முறையில் பராமரித்துக்கொடுப்போம்.

மேலதிக தகவல்களுக்கு:
071 861 2521,
077 869 4333 (37477)(45.3.6)

## கடை வாடகைக்கு

யாழ். A9 வீதியில் கச்சேரிக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 627 2190 (C/10405)(6.11)

## The Jaffna Education Centre
### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English with grammar
short hand typing இரு மொழிகள் மூலமும்
சிங்களம்
ESOL, IELTS ஆகிய வகுப்புக்களுக்கு ஆயத்தம் செய்து விடல்.
ஆகிய வகுப்கபுக்கள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.07.2013
ஆசிரியை : இ. லோகநாயகி
T.P.No:077 677 9340 (30699)(10,6)
பாட முடிவில் "சான்றிதழ் வழங்கப்படும்"

## வாடகை அடிப்படையில் வாகன கூறு விலை

தேசத்தின் மகுடம் கண்காட்சி நடவடிக்கைகளிற்காக எமது சபை பயன்படுத்தும் பொருட்டு மூன்று மாத காலத்திற்கு வாடகை அடிப்படையில் சாரதியுடன் வான் (Van) தேவைப்படுகின்றது. எனவே நல்ல நிலையில் உள்ள வாகனம் தொடர்பில் தங்கள் கூறுவிலையினை கீழ்வரும் முகவரிக்கு 15.07.2013 இற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

தலைவர், பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்,
கண்டி வீதி,யாழ்ப்பாணம்.
T.P-021 222 2034 (c/10410)(3.6.11)

# Thalsevana Holiday Resort
Kankesanthurai, Jaffna, Sri Lanka




உங்களுக்கு சேவையாற்றுவதற்காக எப்போதும் அர்ப்பணிப்புடன் இருக்கும் நாம் உங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பினாலேயே பிரான்சினால் வழங்கப்பட்ட International Star For Leadership In Quality Award இரத்தின விருதை வெற்றிகொண்டோம். உங்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இந்த வெற்றியை நாம் உங்களுடன் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

(+94) 77 3176177, (+94) 77 3176178
info@thalsevanaresort.com (30760)(e)
www.thalsevanaresort.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லை குறித்து

# பிரேரணை சமர்ப்பிக்க மீண்டும் காலக்கெடு

வடமராட்சி, ஜூலை 11
உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லை தொடர்பான பிரேரணைகளை சமர்ப்பிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் தேசிய எல்லை நிர்ணயக் குழு மீண்டும் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்தக் கால அவகாசத்தின் படி உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பாக குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அல்லது சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் தமது பிரேரணைகளை எதிர் வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் சமர்ப்பிக்க முடியும் என தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் ஜயலத் ஆர்.வி.திசநாயக்கா அறிவித்துள்ளார்.

> 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய எல்லை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய எல்லை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு முன்னிலையில் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பாகச் சாட்சியம் அளிப்பதற்கு ஏற்கனவே இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் காலப் பகுதியில் தமது பிரேரணைகளையும் கருத்துக்களையும் முன் வைக்கத் தவறிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கவே இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (வ-8)

## நேற்று ஆரம்பமாகியது வழிகாட்டல் கருத்தரங்கு



தென்மராட்சி, ஜூலை 11
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மூன்று நாள்கள் வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மங்கல விளக்கேற்றி கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தார்.

கடந்த வருட க.பொ.த. சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகளில் அதிகூடிய பெறுபேறுகள் பெற்ற தென்மராட்சி கல்வி வலய மாணவர்களுக்கு ஆளுநரால் விருதுகள் வழங்கப்பட்டன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

## வழங்கப்பட்டது சுயதொழில் உதவிக் கடன்

தென்மராட்சி, ஜூலை 11
தென்மராட்சி பிரதேசத்தில் பெண்களை தலைவராகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பெண்கள் விவகார அமைச்சினால் சுய தொழில் உதவிக் கடன்கள் வழங்கப்பட்டன.

பிரதேசத்தைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் இந்தக்கடன் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மதகு திருத்தம்



யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குவீதியில் உள்ள கழிவு நீர் வடிந்தோடும் வடிகாலையும் கடற்கரை வீதியுடன் இணையும் மதகையும் திருத்தியமைக்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன. இதனால் முதலாம் குறுக்கு வீதியூடானதும் யாழ்ப்பாணக் கடற்கரை வீதியூடானதுமான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. (வ-51)

## மாணவர்களுக்கு கல்வி உதவிகள்

தென்மராட்சி, ஜூலை 11
இந்தியா தமிழ் நாடு ராம்கோ சிமெந்து நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் நடத்தும் மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக ராம்கோ சிமெந்து நிறுவன யாழ். மாவட்ட முகவர் ப.வரதராஜாசிங்கமும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும் கலந்து கொள்வர்.

கட்டடப் பணியில் ஈடுபட்டு வரும் தென்மராட்சி பிரதேச கட்டடக் கலைஞர்களின் பிள்ளைகளான பாடசாலை மாணவர்கள் 512 பேருக்கு ராம்கோ சிமெந்து நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கொடிகாமத்தில் சுகாதாரக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூலை 9
ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய நிறுவனத்தின் அனுசரணையுடன் போசாக்கு மற்றும் சுகாதாரக் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொடிகாமம், எழுதுமட்டுவாழ், உசன், மிருசுவில் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த அன்னையர் கழகங்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடத்தப்படும் ஐந்தாவது சுகாதாரக் கண்காட்சி இதுவென்பதும், ஏற்கனவே சாவகச்சேரியில் மட்டுவில் தெற்கு நாவற்குழி, வரணி ஆகிய பிரிவுகளில் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

## போதையூட்டிய புகையிலைகளை வைத்திருந்தோருக்கு அபராதம்

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்டதாக நம்பப்படும் 945 போதையூட்டப்பட்ட புகையிலைப் பைக்கற்றுக்களைச் சட்ட விரோதமாக தம்வசம் வைத்திருந்த இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா அபராதமும், ஒத்திவைத்த சிறையும் விதித்தது நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டது.



கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி நெடுந்தீவுகுடாப்பிட்டியில்வைத்து இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொன்றும் 8 கிராம் கொண்ட 945 போதையூட்டப்பட்ட புகையிலைப் பைக்கற்றுக்களும் அவர்களிமிருந்து கைப்பற்றப்பட்டன.

பூநகரி, வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த இறப்பியேல் றுக்மன் அலஸ் மற்றும் 149/2, மிரானியா வீதி, கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த அப்துல்லத்தி அஷ்ரப் அலி ஆகியோரே போதைப் பொருளுடன் கைதாகினர்.

நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதன்படி தலா 25 ஆயிரம் ரூபா அபராதமும், தவறின் 2 மாத சிறைத் தண்டனை அனுபவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தவிர இருவருக்கும் 6 மாத சிறைத் தண்டனை விதித்து 5 வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன் அபராதத்தையும் அவர்கள் செலுத்திச் சென்றனர். (த-4)

## சுவாமி விபுலானந்தர் விழா

### நல்லூர் துர்க்கா மண்டபத்தில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஜூலை 11
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் சுவாமி விபுலானந்தர் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுடன் இந்து மாமன்ற உப தலைவரும் இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநருமான ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். இந்திய [illegible] பிரதித் தூதுவர் [illegible] பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் சிறப்புப் பேருரை ஆற்றுவார்.

மேலும் சொற்பொழிவுகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சமய விவகாரங்கள் விழாக்கள் குழுத் தலைவரும் மாமன்ற அறங்காவலருமான கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம், கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவநாதனந்தா, அகில [illegible] இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், கிழக்குப் பல்கலைக்கழக கணினி பிரயோக உதவியாளர் சைவவித்தகர் வெற்றிவேல் சசிதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.



இந்த நிகழ்வில் 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியீடும், தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கலும், இந்து நிறுவனங்களுக்கு மேசைக் கணினிகள் வழங்கலும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மாணவிகளின் பிரச்சினையை தீருங்கள்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் வேண்டுகோள்




திருகோணமலை,ஜூலை 11
நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் முஸ்லிம் மாணவியர் பர்தா அணிவதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கையை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தண்டாயுதபாணியிடம் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தண்டாயுதபாணிக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலை, நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் முஸ்லிம் மாணவியர் தமக்கான கலாசார சீருடையை பாடசாலைக்குள் அணியக்கூடாது என்று தடைசெய்த விவகாரம் தற்போது பூதாகரமாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஒவ்வொரு இனத்துக்கும் தனித்துவமான கலாசார பண்புகள் இருப்பது போல முஸ்லிம்களுக்கும் இருக்கின்றன.

அந்தவகையில் முஸ்லிம் பெண்களின் உடை விவகாரம் முக்கியமானது. அதனால் அரசும் இலவச சீருடையின் போது பர்தாவுக்கென மேலதிகத் துணியை முஸ்லிம் மாணவிகளுக்கு வழங்கி வருகின்றது.

> கலாசார சீருடைத் தடையானது தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தை எனக்கு ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான சூழ்நிலையில் நிலாவெளி தமிழ் மகா வித்தியாலய நிர்வாகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கலாசார சீருடைத் தடையானது தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தை எனக்கு ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமக்குள் ஒற்றுமையாக வாழ்வதன் மூலமே தமக்கான உரிமைகளைப் பெற முடியும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த விவகாரத்தில் தாங்கள் தலையிட்டு பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள ஒழுங்குகள் செய்ய வேண்டும்-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)



மட்டக்களப்பு, பாலமுனை கடற்கரை பூங்காவில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு தவிசாளர் எம்.ஏ.அன்ஸிலின் வழிகாட்டுதலுடன் நடைபெற்றது. அங்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

# '13' ஐ மாற்றுவதற்கு அரசு முயலக் கூடாது

## கல்முனை மாநகர சபையில் தீர்மானம்



அம்பாறை, ஜூலை 11
அரசமைப்பின் '13' ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்யவோ, அதனை நீர்த்துப் போக வைக்கவோ அரசு முனையக் கூடாது. அத்தகைய நடவடிக்கைகளை அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று, கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் செவ்வாய்க்கிழமை மாநகர முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் தலைமையில், மாநகரசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், '13' ஆவது திருத்தச் சட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது என வலியுறுத்தப்பட்டது.

அதனை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் என்று அரசைக் கோரும் தீர்மானத்துக்கான பிரேரணையை முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் சபையில் முன்மொழிந்தார்.

பிரேரணை விவாதத்துக்கு விடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது ஆளும் தரப்பான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சீ.எம்.முபீத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் இஸட்.எச்.ஏ.றஹ்மான் தான் பிரேரணைக்கு ஆதரவுமில்லை, எதிர்ப்புமில்லையெனக் கூறி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது சபையிலிருந்து வெளியேறினார்.

மற்றொரு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான ஏ.எம்.றியாஸ், குறித்த '13' ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றார். சிறுபான்மை சமூகங்களுக்கு நன்மை பயக்கும் வகையிலும் அத்தகைய மாற்றங்கள் அமையலாம் எனக் கூறி பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார்.

எனினும் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை தீர்மானமாகச் சபையில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப் தமது பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் கூறியதாவது:

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சி அதிகாரத்திலிருக்கும் கல்முனை மாநகரசபையில் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களே அங்கம் வகிக்கின்றோம்.

இந்த நிலையில் சிறுபான்மையின மக்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட '13' ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வரவும், அதனை நீர்த்துப்போக வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சிறுபான்மைச் சமூகங்கள் இந்த நாட்டில் எந்த உரிமையும் பெற்று வாழக்கூடாது என்பதற்காக பேரினவாத, இனவாத சக்திகள் 13 ஐ ஒழிக்க வேண்டுமென இன்று வரிந்து கட்டிக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.

எனவே 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வரும் விடயத்தில் அரசு காட்டிவரும் முனைப்பைக் கைவிட வேண்டுமென நமது சபை மூலம் கோருவோம்-என்றார். (ச-30-10)

## மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

திருகோணமலை,ஜூலை 11
திருகோணமலை சர்வோதயத்தின் சர்வ மதகுருமாரின் நிதிப் பங்களிப்புடன் மொழி ஆற்றலை விருத்தி செய்யும் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மொழி மூலமான அறிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் 5 மாத காலப் பயிற்சி நெறியை நிறைவு செய்த 32 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அன்புவழிபுரத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வு, அன்பு சமூக மேம்பாட்டு அமைப்பின் செயலர் தனராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சர்வோதயத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர்களான கலை வர்ணன், கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-40)

## திடீர்ச் சோதனையில் 20 வாகனங்கள் மாட்டின




மட்டக்களப்பு,ஜூலை 11
மட்டக்களப்பு,கல்முனை பிரதான வீதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் வாகன பரிசோதனை நடவடிக்கையின்போது பழுதடைந்த நிலையில் சேவையில் ஈடுபட்ட 20 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.


மட்டக்களப்பு மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் யூ.எல். வாஹிட் தலைமையிலான குழுவினரே இந்த வாகன சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். காத்தான்குடி மற்றும் களுவாஞ்சிக்குடி பொலிஸாருடன் இணைந்து குருக்கள் மடம் பிரதான வீதிச் சந்தி யிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனம் காணப்பட்ட வாகனங்கள் 10 நாள்களுக்குள் திருத்தி அமைக்கப்பட்டு மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத் திடம் [illegible] வேண்டும் என்று [illegible] ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகயா குண்டு வெடிப்புடன் இலங்கைக்குத் தொடர்பில்லை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 11
புத்தகயா குண்டுவெடிப்புக்கும் இலங்கையில் இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று அரசு செவ்வாய்க்கிழமை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.
புத்தகயா விவகாரம் குறித்து இந்திய அரசுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம் என்று அரசு கூறியுள்ளது.
நாடாளுமன்றில் செவ்வாய்க்கிழமை புத்தகயா குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கருத்துகளுக்குப் பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.
புத்தகயா சம்பவத்தையும் இலங்கையில் இடம்பெற்றுவரும் சம்பவங்களையும் தொடர்புபடுத்தி கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.
ஆனால், புத்தகாயா குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கும் இலங்கையில் இடம்பெற்றுவரும் சம்பவத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை. விசாரணைகள் மூலம் இது உறுதியாகியுள்ளது என்று பிரீஸ் தெரிவித்தார். (ச-சி)

# மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணமில்லை

## முடிவை மாற்றினால் சு.கட்சியில்தான் பணியாற்றுவேன் என்கிறார் சந்திரிகா



கொழும்பு,ஜூலை 11
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மீண்டும் அரசியலில் ஈடுபடும் ஆர்வமோ, எண்ணமோ இல்லை என்று அவரது செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.
அவர், தனது முடிவை மாற்றிக் கொண்டால்கூட, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு விசுவாசமான அரசியல் நடவடிக்கையிலேயே ஈடுபடுவார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
இவங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து சந்திரிகா குமாரதுங்க அரசியலில் ஈடுபடவுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் சிலவற்றில் பரபரப்பான தகவல்கள் வெளியானதையடுத்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
சரத் பொன்சேகாவுடன் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக சந்திரிகா எத்தகைய கலந்துரையாடல்களையும் நடத்தவில்லை.
சந்திரிகா குமாரதுங்க, இன்னும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக - அதன் காப்பாளராக இருக்கிறார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கிய சந்திரிகா, அதன் தலைவர் பதவியையும் வகித்துள்ளார்.
அவர் சுதந்திரக்கட்சியை விட்டு வெளியேறும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க ஹெக்டர் கோப்பேகடுவ, இலங்கரத்ன, ரத்ன தேசப்பிரிய சேனநாயக்க, தர்மசிறி சேனநாயக்க, ரட்ணசிறி விக்கிரமநாயக்க, டி.எம். ஜெயரட்ண போன்ற தலைவர்கள் போராடினர் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

> ”
> சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கிய சந்திரிகா, அதன் தலைவர் பதவியையும் வகித்துள்ளார்.

## பணிப்பெண்களாக சவூதி செல்வோரின் சம்பளம் அதிகரிப்பு




கொழும்பு,ஜூலை 11
சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்களாக செல்வோரின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.
இதற்கமைய சம்பளம் 750 தொடக்கம் 900 சவூதி ரியால் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய ஒழுங்கு விதிகளுக்கு அமையவே இந்த சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தொல்பொருள் கொள்கலன் பறிமுதல்

கொழும்பு,ஜூலை 11
தொல்பொருள்கள் அடங்கிய கொள்கலன் ஒன்றை செவ்வாய்க்கிழமை கைப்பற்றியுள்ளதாக சுங்க உயிரினப் பரவல் பிரிவு அறிவித்துள்ளது.
கருங்காலி மரப்பலகையினால் தயாரிக்கப்பட்ட தளபாடங்கள் மற்றும் பழங்கால நாணயங்கள் உள்ளிட்டவையே குறித்த கொள்கலனில் இருந்ததாக அந்தப் பிரிவு அறிவித்துள்ளது.
மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தயாராகவிருந்த நிலையிலேயே குறித்த பொருள்கள் அடங்கிய கொள்கலன் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

## போஷாக்குக் குறைபாட்டை நீக்க மாணவருக்கு மருந்து



கொழும்பு, ஜூலை 11
கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்கள் போஷாக்குக் குறைபாட்டை தடுக்கும் நோக்கில் அவர்களுக்கு இரும்புச்சத்து, மற்றும் விற்றமின் சி வில்லைகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளன.
அதற்கமைய பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் இரும்பு (பெரல்சல்பேற்) 200 மில்லிகிராம் போலிக் அமிலம் ஒரு மில்லிகிராம் மற்றும் 100 மில்லி கிராம் விற்றமின் சி என்றவாறு பாடசாலை நேரத்தில் தொடர்ச்சியாக 24 வாரங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சுக்கள் தீர்மானித்துள்ளன.
இந்தத் திட்டத்துக்கு அமைய முதலில் மாணவர்களுக்குப் பூச்சி மருந்து வில்லையொன்றை வழங்கி அடுத்த கட்டமாக தினமும் மாணவர்களின் வரவு பதியப்படும் நேரத்தில் இந்த மருந்துகளைக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு மாணவர்களுக்குமான சிகிச்சை அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறும் ஒவ்வாத நிலைப்பாடுகள் இருப்பின் இனங்கண்டு கொள்ளுமாறும் கல்வியமைச்சு ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.(ச-22)



இயற்கையின் சீற்றத்தால் தென்பகுதி கரையோர மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் வைத்து மீனவக் குடும்பங்களுக்கு நிதி உதவிகளை வழங்கினார் .

## யானைத் தந்தத்துடன் இருவர் மாட்டினர்

கொழும்பு,ஜூலை 11
கண்டி, பேராதனை பிரதேசத்தில் சட்டவிரோதமாக இரு யானைத் தந்தங்களை வைத்திருந்த இருவர் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இந்தச் சந்தேகநபர்கள் கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், கண்டி நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.
அதனையடுத்து சந்தேகநபர்கள் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.(ச)

# டெங்கு நோயாளருக்கு வழங்கும் சேலைனில் தரக்குறைவு இல்லை

## தேசிய மருந்துப் பொருள் அதிகார சபை மறுப்பு

கொழும்பு,ஜூலை 11
டெங்கு நோய் தீவிரமடையும் சந்தர்ப்பங்களில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் டெக்ஸ்ட்ரான் - 40 என்ற சேலைன் மருந்து தரம் குறைந்தது என்ற குற்றச்சாட்டை தேசிய மருந்துப் பொருள் அதிகார சபை முற்றாக மறுத்துள்ளது.
இந்த மருந்து மிகத் தரமானது என்பதை உறுதிப்படுத்திய அதிகார சபை, இந்த மருந்தைத் தரம் குறைந்தது எனச் சில தொழிற் சங்கங்கள் சில ஊடகங்கள் ஊடாகக் குறிப்பிட்டிருப்பது தொடர்பாக குற்றப் புலனாய்வு பிரிவினர் மூலம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் கூறி உள்ளது.
இந்தச் சேலைன் தற்போது தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.
அது தரமான மருந்து என்பதால்தான் நோயாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்று மருந்துப் பொருள் விநியோகப் பிரிவின் பணிப்பாளர் கமல் ஜயசிங்க தெரிவித்தார். இந்தச் சேலைன் மருந்து தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இந்த மருந்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபாரிசின் அடிப்படையில்தான் முதலில் இறக்குமதி செய்யப்பட்டது. தற்போது அரசு தாய்லாந்து அரசிடமிருந்து இதனை இறக்குமதி செய்கிறது என்று அவர் தெரிவித்தார். (ச)

> ”
> உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபாரிசின் அடிப்படையில்தான் முதலில் இறக்குமதி செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இனி எந்தப் பக்கம் ஓடும் இந்திய அரசின் ராஜீக வண்டி?

இந்தியா என்றால் எமக்கென்ன கொம்பனா?

இந்தப் பாணியில் கேட்கும் தொனியில், கொழும்பு வந்திருந்த அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுடன் உரையாடி அனுப்பி வைத்துள்ளது எமது நாட்டின் அரச தரப்பு.

இந்திய அரசுக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை மதித்து நடக்க வேண்டும். அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வையும் தாண்டிய அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற இந்திய நிலைப்பாட்டை தூக்கி எறிந்து இலங்கைத் தரப்பு முகத்தில் அடித்தாற் போல் செயற்பட்டுள்ளது.

பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பகிர்வது சிக்கலானது. ஒரு தீர்வை நடைமுறைப்படுத்தும் போது அனைத்துப் பிரிவினருக்கும் அது பொதுவானதாக இருக்க வேண்டும்–என்று இந்திய அரசின் பிரதிநிதிகளிடம் நியாயம் பிளக்கப்பட்டுள்ளது; உரைக்கப்பட்டுள்ளது.

யார் எதனைக் கூறினாலும், எது உகந்தது என்று தெரிவித்தாலும், விட்டுக்கொடுப்பு ஒரு துளிதானும் இல்லாது, இந்த நாட்டு அரசு தான் நினைத்ததையே, திட்டமிடுவதனையே செயற்படுத்தும் என்பது மறைபொருளாக மேனனிடம் இடித்து உரைக்கப்பட்டுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தத்தை மாற்றியமைக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் தொடரும் என்றும் இந்திய உயர் அதிகாரியிடம் அழுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் கருத்து வெளியிட்ட சிவ்சங்கர் மேனன், தாழ்ந்த குரலில் பேசும் தொனியில் தமது கருத்துக்களை வெளியிட்டமை–

இலங்கை அரசு, பதின்மூன்றாவது திருத்தம் குறித்துத் தமது அரசு செய்வதற்கு முனைவதில், ஓர் அங்குலமேனும் அசைந்து கொடுக்காது என்பதனைப் பூடகமாகத் தொட்டுக் காட்டுகிறது.

நாம் எமது கருத்தை, நிலைப்பாட்டை வெகு தெளிவாகக் கூறியிருந்தோம். இலங்கை மக்களிடையே ஆக்கபூர்வமான நல்லிணக்கத்தை நகர்த்துவதற்கு, கடந்த காலத்தில் இனரீதியாக உண்டாக்கப்பட்ட அரசியல் அந்தலைகளை அகற்றி முன்னோக்கி நகர்வதற்கான கருத்துக்களை எடுத்துரைத்தோம்–

என்று மேனன் தெரிவித்திருப்பது, இந்திய அரசின் கருத்துக்களை இலங்கை அரசு மனப்பூர்வமாக உள்வாங்கும் நிலையில் இல்லை என்பதனையே வெளிப்படுத்துகிறது.

மறுபுறத்தில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவிற்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தள்ளிவிடுவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்பதிலேயே கொழும்பு அதீத அக்கறை காட்டியதும் வெளிச்சமாகத் தெரிகிறது.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திஸ்ஸ விதாரண, ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அரசில் முக்கிய அமைச் சர்களாக அங்கம் வகிக்கின்றபோதிலும் அவர்களை ஒதுக்கிவிட்டு தெரிவுக்குழு உறுப்பினர்களாக 19 பேரின் பெயர்கள் வெளியிடப்பட்டிருந்தன.

எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் தெரிவுக்குழு நியமனத்தை நிராகரிப்பதற்கு வெவ்வேறு காரணங்களைத் தெரிவித்தன. தெரிவுக்குழுவில் இடம்பெறவேண்டியவர்களின் பெயரை அறிவிக்காமல் புறக்கணித்தன.

இத்தகைய சூழமைவில், ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் கூடி அரசமைப்பில் மாற்றம் செய்வது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்போகிறார்கள்! தெரிவுக்குழு என்று ஒன்று அமைக்கப்படுவதன் நோக்கமே பல்வேறு கருத்துகளைக் கொண்ட பல கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஒரு விடயத்தை ஆராய்ந்து இறுதித் தீர்மானமொன்றை மேற்கொள்வதுதான். ஆனால் இங்கு அந்த அடிப்படை நோக்கமே தவறானதாகிவிட்டது.

உண்மையில், எதிர்க்கட்சிகள் சார்பில் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் தெரிவுக்குழுவின் அமர்வு பின்போடப்பட்டிருக்கவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான தெரிவுக் குழுவைக் கூட்டும் முயற்சி இதுவரை வெற்றியளிக்கவில்லை. அரசின் நிபந்த னையை ஏற்க மறுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளாததே இதற்குக் காரணம். ஆனால், அரசமைப்புத் திருத்தம் குறித்த தெரிவுக் குழுவை அரசு அவசரமாகக் கூட்டியிருப்பது வடமாகாணத் தேர்தல் தொடர்பாகத் தனக்குச் சாதகமான சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே என்பது வெளிப்படையான ஒன்று.

ஜே.ஆர்.– ராஜீவ் ஒப்பந்தம் தொடர்பாகத் தற்பொழுது இந்தியா எடுத்துள்ள நிலைப்பாடு, தெரிவுக்குழுவின் நோக்கங்களை மட்டுமல்ல, அரசமைப்புக்கான 19 ஆவது திருத்த முயற்சியையும் கேள்விக் குறியாக்கி உள்ளது.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் மாற்றம் எதனையும் மேற்கொள்ள இந்தியா ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்திருப்பது இலங்கைக்குப் பெரும் ஒரு பின்னடைவன்றி வேறல்ல.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களை தறித்து எறிந்து, தமிழ் மக்களுக்கு உள்ள அற்ப சொற்ப ஆட்சி உரிமைகளை தீய்த்து விடுவதில் இன்றைய அரசு இத்தனை ஆழமாகவும் பிடிவாதமாகவும் உள்ளதை இந்திய அரசு உள்ளூர உணர்ந்து கொள்வதற்கு மேனனின் கொழும்பு விஜயம் பெரிதும் உதவியுள்ளது எனலாம்.

இதன் பின்னர், தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கு அது உகந்த பாதையில் தடம்பதிக்குமா என்பதனை எவரும் எதிர்வு கூற முடியாதே....

# ‘13’ ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

வடக்கு கிழக்கு பிரிக்கப்படக் கூடாது என 13ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்ட போதிலும் வடக்கு கிழக்கு தற்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும்.

இவ்வாறு ஆப்கானிஸ்தானுக்கான முன்னாள் இந்தியத் தூதர் விவேக் கற்யூ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு, மறைமுகமாக மக்கள் கட்டமைப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் தமிழ் மக்களினதும் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களினதும் உரிமைகளையும் அவாக்களையும் நசுக்குவதாக இருக்கக் கூடாது.

இலங்கைஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷவும் அவரது மூன்று சகோதரர்களான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அரசியல் மற்றும் பொருளாதார நகர்வுகளைத் தீர்மானிக்கும் பசில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்திகளாக உள்ளனர். இந்நிலையில் இலங்கையில் எவ்வாறான அரசியல் நிலைமை காணப்படுகின்றது என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் ஜனநாயக அரசமைப்பு நடைமுறையில் உள்ள போதிலும், நாடாளுமன்றில் உள்ள எதிர்க்கட்சிகள் மற்றும் ஆளும் கூட்டணிக் கட்சிகள், ராஜபக்ஷ சகோதரர்களை, குறிப்பாக இலங்கை அரசை எதிர்த்துக் குரல் கொடுக்காததால் இலங்கையின் தலைவிதியை ராஜபக்ஷாக்கள் தீர்மானிக்கின்றனர்.

மே 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் ராஜபக்ஷ சகோதரர்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டி வருகின்றனர் என்பது தெளிவாகிறது. அதாவது விடுதலைப் புலிகளைப் போன்ற அமைப்பொன்று நாட்டில் உருவாவது தடுக்கப்பட வேண்டும் என்கின்ற அடிப்படைக் கோட்பாட்டை ராஜபக்ஷ சகோதரர்கள் நிறைவேற்றியதன் மூலம் இவர்கள் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற சக்திகளாகத் தாம் உள்ளனர் என்று கருதுகிறார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைவாதம் தொடர்பான உணர்வுகளை அழிப்பதன் மூலம் நாட்டில் மீண்டுமொரு பிரிவினைவாத அமைப்பு தோற்றம் பெறமுடியாது என்பதை ராஜபக்ஷ சகோதரர்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையிலுள்ளனர். இதனை நிறைவேற்றுவதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் முதலில் 13ஆவது திருத்தச் சட்டத்தையும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினது பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக போரின் இறுதி மாதங்களில், போர்வலயத்தில் அகப்பட்டுத் தவித்த மக்களை இலங்கைப் படைகள் பெருமளவில் கொன்றிருந்தன. இந்த வடு மக்கள் மத்தியில் ஆறவேண்டுமாயின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

எவ்வாறிருப்பினும், மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குகின்ற குறிப்பாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகள் மத்தியில் பரவலாக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை ஜனாதிபதியும் கோத்தபாயவும் எப்போதும் விமர்சித்து வருகின்றனர்.

இவர்கள் தற்போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் என்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தின் சரத்துக்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ராஜபக்ஷ சகோதரர்கள் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டிய பெரும்பாலான அதிகாரங்களை மத்திய அரசின் கீழ் கொண்டுவருவதன் மூலம் எதிர்காலத்தில் அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வர மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறார். இவ்வாறான நகர்வானது நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடையது எனக் கூறி நாட்டின் முழு அதிகாரங்களையும் இலங்கை முழுமையாக எடுத்துக் கொள்வதற்கான நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

இவ்வாறான அரசியல் மாற்றங்களை செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் ஏற்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்புகிறார். நவம்பரில் பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாடு இடம்பெறுவதற்கு முன்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் ராஜபக்ஷ விரும்புகிறார்.

தற்போது வரை, இலங்கை ஜனாதிபதியால் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் எதிர்த்துள்ளன.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், இலங்கையில் பல்வேறு மீள்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உண்மை. ஆனால் வடக்கு மாகாணசபை ஆளுநராக ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதானது பொதுநிர்வாகம் எவ்வளவு தூரம் ஜனநாயக வழியில் நடைபெறுகின்றது என்பதை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

நீண்ட காலம் போர் இடம்பெற்ற இலங்கையில் உடனடியாக மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசானது அந்நாட்டு இராணுவத்தையும் உள்வாங்கலாம் என்பது உண்மையான விடயமாகும். ஆனால் வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் தொகையைக் குறைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துவரும் நிலையில், பொது நிர்வாகத்தில் இவ்வாறு இராணுவத்தின் தலையீடு காணப்படுவது அதிருப்தியைத் தருகின்றது. பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொதுமக்களது காணிகளை இலங்கை இராணுவத்தினர் பிடுங்குவது தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். வடக்கில் அதிகளவு இராணுவத்தினர், பெருமளவு இராணுவ வசதி வாய்ப்புக்களுடன் குவிக்கப்பட்டுள்ளதானது ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் வாழ்வில் தலையீடு செய்வதாக நோக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர், பிரிவினைவாதம் தொடர்பான அச்சுறுத்தல் நீக்கப்பட்டுவிட்டது என நம்பப்படுகின்ற போதிலும், ராஜபக்ஷவும் சிங்களத் தேசியவாதிகளும் பிரிவினைவாதம் என்பது முற்றுமுழுதாக ஒழியவில்லை என்கிறார்கள்.

அதாவது குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் தனித்தாய்நாட்டை அடைவதற்கான குறிக்கோள் மிக வலுவாகக் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலம்பெயர் தமிழ்ச் சமூகமானது இலங்கை மீது அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்நிலையில் புலம்பெயர் தமிழ்ச் சமூகமானது எதிர்காலத்தில் இலங்கையின் வடக்கில் வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும், இதற்கான தளமாக அங்கீகரிக்கப்படும் வடக்கு மாகாண சபையானது அமையலாம் எனவும் நம்பப்படுகிறது.

21ஆம் நூற்றாண்டில் பயங்கரவாத வன்முறை என்பது மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளபோதிலும், பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் அங்கு வாழும் அனைத்து இன மற்றும் மத சமூகங்களின் நியாயமான அவாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களது அடையாளம், நீதி, ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திகள் போன்ற பல்வேறுபட்ட உரிமைகள் மதிக்கப்படும்போது பயங்கரவாதம் தோன்றுவதற்கான வாய்ப்பு ஏற்படாது.

சிறுபான்மை சமூகங்கள் மீது பெரும்பான்மை சமூகங்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்ப்பதை தவிர்த்து சிறு பான்மை சமூகங்களின் தேவைகளையும் மதித்து புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். வரலாற்று ரீதியான பதிவுகள், புராதன காலப் பதிவுகள், போர்க்களங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் போன்ற பல்வேறுபட்ட அனுபவங்கள் நாட்டு மக்களின் தலையெழுத்துக்களை, நாட்டின் தலையெழுத்தை இந்த நவீன காலத்திலும் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கருதும் தலைவர்களுக்கு வழிகாட்டுதலாக இருக்க முடியாது.

சிறுபான்மை தமிழ் அரசியல் வகுப்பின் மனங்களை வெல்லக் கூடிய மிகச் சிறந்த மைல்கல்லாக 13ஆவது திருத்தச் சட்டம் காணப்படுகிறது. வடக்கு கிழக்கு பிரிக்கப்படக் கூடாது என 13ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்ட போதிலும் வடக்கு கிழக்கு தற்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். இந்த நிலையில் இத்திருத்தச் சட்டத்தை மேலும் பலவீனப்படுத்துவதற்காக எடுக்கப்படும் எந்தவொரு நகர்வும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.


13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். அண்மையில், இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித், இலங்கை வெளியுறவு அமைச்சரைச் சந்தித்தபோது, இலங்கை ஜனாதிபதி அறிவித்த கால வரையறைக்குள் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய தேவையுள்ளதாக வலியுறுத்தியிருந்தார்.

இந்தியா, இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாடு தொடர்பில் மிக உறுதியான, பலமான அர்ப்பணிப்பை வழங்கும் அதேவேளையில், தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் சமூகத்தின் நலனுக்காகவும் உரிமைக்காகவும் ஒலிக்கும் குரல்களையும், உணர்வுகளையும் இந்தியாமுழுமையும் பகிர்ந்துகொள்கிறது. இவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொண்டு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ செயற்படுவாரா? ராஜபக்ஷ இவ்வாறு செயற்படாவிட்டால், இந்தியா எத்தகைய நடவடிக்கையை எடுக்கும்? கடந்த காலத்தில் இவ்வாறான குழப்பகரமான சூழலை வெற்றி கொள்ள உதவிய தொடர்பாடல் ஊடகங்கள் தற்போது மிகவிரைவாகச் செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

(நன்றி: த ஹிந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்துச் செல்லும் சனத்தொகையை கட்டுப்படுத்த வேண்டிய தருணமிது



ராஜராஜன்

**இன்று உலக சனத்தொகை தினம்**

இன்று உலக சனத்தொகை தினமாகும். வேகமாக அதிகரித்து வரும் உலக சனத்தொகை காரணமாக எதிர்காலத்தில் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள நேரிடுமென சனத்தொகை தொடர்பான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கான ஆதாரங்களும் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. 1804 ஆம் ஆண்டு 100 கோடியாகவும், 1927 ஆம் ஆண்டு 200 கோடியாகவும் இருந்த உலக சனத்தொகை இன்றைய நிலையில் 700 கோடியையும் தாண்டிச் சென்றுள்ளது. ஆனால் அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப உலகில் காணப்படும் வளங்கள் இல்லை. அவை பற்றாக் குறையாக உள்ளதால் மக்கள் அவலங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

உலகளாவிய ரீதியில் சீனாவும், இந்தியாவுமே அதிகளவு மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. சீனாவில் சுமார் 134 கோடி மக்களும், இந்தியாவில் 124 கோடி மக்களும் தற்போது வாழ்ந்து வருகின்றனர். சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு பிள்ளை என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால் அந்த நாட்டின் சனத்தொகை வளர்ச்சியில் தொய்வு காணப்படுகின்றது. ஆனால் இந்தியாவில் சீனா போன்று இறுக்கமான கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. இதனால் இன்னும் சில ஆண்டுகளில் இந்தியா சனத்தொகையில் சீனாவை முந்திவிடும் ஏதுநிலை காணப்படுகின்றது.

இந்த இரு நாடுகளும் பொருளாதார ரீதியில் எவ்வளவுதான் அபிவிருத்தியைக் கண்டுள்ள போதிலும் அதிகரித்துக் காணப்படும் சனத்தொகை காரணமாக அதன் பயன்கள் மக்களைச் சென்றடையவில்லை. இதனால் இந்த இருநாட்டு மக்களும் இன்னமும் வறுமை நிலையில்தான் காணப்படுகின்றனர். குறிப்பாக இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குள் கீழே வாழ்ந்து வரும் மக்களின் தொகை ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்வதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது வளர்ந்து வரும் நாடுகளிலேயே சனத்தொகை அதிகரிப்பு வேகமாக இடம்பெற்று வருகின்றது. இதனால் இந்த நாடுகள் தமது நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தற்போது கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் என்ற அடிப்படையில் உலக சனத்தொகை வருடம் ஒன்றுக்கு 8 கோடியே 30 லட்சம் என்ற அளவில் அதிகரித்துச் செல்வதைக் காண முடிகின்றது.

எமது இலங்கையைப் பொறுத்த வரை நாட்டின் சனத்தொகை 2 கோடியையும் தாண்டியுள்ளது. இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பதனால் எதிர்காலத்தில் இங்கு ஏற்படும் சனத்தொகை வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியுமா என்ற சந்தேகம் இப்பொழுதே தோன்றியுள்ளது.

குறிப்பாக ஆபிரிக்க நாட்டுப் பெண்கள் பதின்ம வயதிலேயே குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதால் அங்கு சனத்தொகை துரிதமாக அதிகரித்துச் செல்லும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதனால் பொருளாதார ரீதியில் மிகவும் நலிந்த நிலையில் காணப்படும் ஆபிரிக்க மக்கள் கடுமையான வறுமை நிலையை எதிர்கொள்ள வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஒரு சில நாடுகளைத் தவிர அநேகமான ஆபிரிக்க நாடுகளில் வசிக்கும் மக்கள் தமது ஒரு வேளை உணவைக் கூடப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இதனால் ஆண்டுதோறும் ஏராளமான குழந்தைகள் போசாக்குக் குறைபாடு தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்கு சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கென பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம் பெறுகின் போதிலும் அவை முழுமையான பயன்களைத் தரவில்லை.

உலக சனத்தொகையில் முதல் 10 இடங்களை வகிக்கும் நாடுகளை எடுத்துக் கொண்டால் சீனா 134 கோடி, இந்தியா 124 கோடி, ஐக்கிய அமெரிக்கா 31 கோடி, இந்தோனேசியா 23 கோடி, பிரேசில் 19 கோடி, பாகிஸ்தான் 17 கோடி, நைஜீரியா 16 கோடி, வங்காள தேசம் 15 கோடி, ரஷ்யா 14 கோடி, ஜப்பான் 12 கோடி என்ற அடிப்படையில் சனத்தொகை காணப்படுகின்றது. மேலும் ஆசிய நாடுகள் பல அதிகளவு சனத்தொகையைக் கொண்டுள்ளமையும் தெரிய வருகின்றது.

உலக சனத்தொகையில் அரைவாசிப் பேர் 25 வயதை அடையாதவர்களாக உள்ளதால் சனத்தொகையை உடனடியாகக் கட்டுப்படுத்துவது என்பது கடினமான விடயமாக மாறியுள்ளது. ஆனால் உலக சனத்தொகையில் மேன்மேலும் அதிகரித்த வளர்ச்சி காணப்படுமாயின் எதிர்காலத்தில் பலர் பட்டினியால் இறக்க வேண்டிய அவல நிலையும் உருவாகும்.

இன்று சுமார் 925 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். ஆண்டுதோறும் 25 மில்லியன் குழந்தைகள் பசியால் இறக்கின்றனர். போசாக்கின்மையால் 170 மில்லியன் குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுகின்றனர். எதிர்காலத்தில் இவை பன்மடங்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

எமது இலங்கையைப் பொறுத்த வரை நாட்டின் சனத்தொகை 2 கோடியையும் தாண்டியுள்ளது. இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பதனால் எதிர்காலத்தில் இங்கு ஏற்படும் சனத்தொகை வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியுமா என்ற சந்தேகம் இப்பொழுதே தோன்றியுள்ளது. மேலும் போர் மற்றும் புலம் பெயர்வு ஆகியனவற்றால் தமிழர்களின் சனத்தொகையில் பெரு வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனைச் சீர் செய்வதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

மேலும் சிங்கள இனத்தவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்காது அதிகளவில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தீவிர பிரசாரங்கள் சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள் சிலவற்றால் விடுவிக்கப்படுவதால் எதிர்காலத்தில் சிங்கள மக்களின் சனத்தொகையில் அதிகரிப்புக் காணப்படும் என எதிர்பார்க்கலாம்.

ஆற்று மணலைப் போன்று பெருக வேண்டுமென முஸ்லிம்களின் மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவர்களின் பெருக்கத்தில் தடைகள் எதுவும் ஏற்படாது.

ஆகவே இலங்கைத் தமிழர்களின் நிலைதான் பரிதாபகரமாக அமையப் போகின்றது.

ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் பிறக்கும் போது அவற்றின் உணவு, கல்வி, மருத்துவம், உடை ஏனைய தேவைகள் ஆகியவற்றை ஓரளவு சமாளித்துக் கொள்ள முடியும். ஆனால் பல குழந்தைகள் இருக்கும் ஏராளமான குடும்பங்களில் குழந்தைகளுக்குத் தேவையான உணவைக் கூட வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. தமது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக ஏராளமான சிறுவர்கள் பாடசாலைகளின் வாயிலைக்கூட எட்டிப் பார்ப்பதில்லை. ஆகவே ஒவ்வொரு குடும்பத்தினரும் திட்டமிட்ட வகையில் குழந்தைகளைப் பெற்று அவர்களை நல்லமுறையில் வளர்த்தெடுக்க வேண்டிய அவசிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் சீனாவும், இந்தியாவுமே அதிகளவு மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. சீனாவில் சுமார் 134 கோடி மக்களும், இந்தியாவில் 124 கோடி மக்களும் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

எனவே உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்கள் உலக சனத்தொகை தினமான இன்று சனத்தொகை அதிகரிப்புக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றுவோமென உறுதி பூண வேண்டும். இன்று இந்த உலகிலே வாழ்கின்ற நாம் எமது எதிர்காலச் சந்ததியினரின் சுபீட்சமான வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் செயற்படவேண்டிய தருணமிது என்பதை மறந்துவிடலாகாது.

இதுவே உலக சனத்தொகை தினம் எமக்கு வழங்கும் செய்தியுமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
11/07/2013



# நவ நாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே...

இன்றைய காலகட்டத்தில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்பவர்கள் ஆண்களே. ஏனென்றால் அவர்கள் அணியும் ஆடைகள் மற்றும் அணிகலன்கள், அவர்களது சிகை அலங்காரம் எல்லாமே சமுதாய விரோதச் செயல்களாகவே இருக்கின்றன.

இப்பொழுது நவீன காலத்து ஆண்களின் ஆடையை எடுத்துக் கொண்டால் அவர்களது ஜீன்சில் எத்தனையோ பொக்கற்றுக்களும், சிப்புகளும் தொங்கிக் காணப்படுகின்றன.

சிகை அலங்காரத்தை எடுத்துக் கொண்டால் ஆண்கள் குறிப்பாக இன்றைய இளைஞர்கள் பலவிதமான பாணிகளில் தலைமயிரை வெட்டி அழகுபடுத்துவதும், தலை மயிரை வளர்த்து தலைமயிரிற்கு பல நிறத்தை பூசிக் கொண்டும் திரிகின்றனர்.

இப்பொழுது சிறுவயதில் இருந்தே ஆண்கள் புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்க வழங்கங்களை பழகிக் கொண்டு சமுதாயத்தை பாழடையச் செய்கின்றனர்.

ஆண்கள் வீதியில் தனித்து நின்றும் சேர்ந்து நின்றும் செல்போன் கதைப்பதும் தெரிந்த பெண்களுக்கு குறும் செய்தி அனுப்புவதும் அவர்களின் அன்றாட விடயங்களாகி விட்டன.

இப்பொழுது ஆண்கள் தங்களுக்கு என்று தனித்தனியே 'பேஸ்புக்' திறந்து ஒருவரை ஒருவர் அறிமுகமாக்கி அவர்களது வாழ்க்கையைப் பாழடையச் செய்கின்றனர். ஆண்கள் காதில் தோடு குத்துவதும், காலில் மெட்டி அணிவதையும் காணக் கூடியதாக உள்ளது. எனவே நவநாகரிகம் எனும் போர்வைக்குள் மூழ்கிய ஆண்கள் அதிலிருந்து மீளுவதற்கு சிரமப்படுகின்றனர்.

த.றஷினா, சாவகச்சேரி வடக்கு மீசாலை.

# ஏமாற்றம்



காதலில்
காத்திருக்க
சொன்னவளே
சுகம் என நினைத்தேன்
சுகமே
சுமையாகி விட்டது
காலத்தின் மாற்றம்
காதலின் மாற்றமானதால்
தெரிந்தும் தெரியாமலே
ஏமாறி விட்டேன்!

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு


## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**அரசியலில் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது**

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................................
முகவரி :- ........................................................
........................................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# முதுமையை மதித்திடுவோம்

அழகு நிலா ஒளி வீச
அருந்தமிழ் மொழியிலே
அழகான தமிழ்ப்பாட்டி
அரியதோர் கதை சொன்னாள்

கண்ணெல்லாம் அவள் முகத்தில்
கவர்ச்சியுடன் அவள் சொன்ன கதை - எம் மனத்தில்
கற்பனையும் கலந்தெடுத்து
காவியமாக்கினாள் தன் அனுபவத்தை

கால் இரண்டும் முன்னீட்டி - அதிலே
காய வைத்திருக்கும் சிறு தானியத்தை
கண்ணாரக் காத்து நின்றாள் - ஒரு
காவல் சேவகியாய்

வான்மேகம் கறுத்தது
வந்ததுவோ சட்டென்று - பெருமழை
வண்ணவுலகில் திளைத்திருந்த அவள்
கவனமின்றி இருந்து விட்டாள்

மருமகள் வந்தாள் - வேலையால்
மாமியாரின் தனிப் பாத்திரத்தில்
மகனின் கட்டளையால்
மனமின்றி தேநீர் ஊற்றினாள்

கொடுத்ததும் கொடாததுமாய்
கொட்டித்தீர்த்தாள் மாமியாரைப் பற்றி
கொடுத்த தேநீரையும் குடிக்க விடாமல் - பேச்சில்
கொன்றொழித்தாள் அவள் மனதை

மகன் வந்தான்
மாற்றப்பட்டாள் உறைவிடம்
மர்மத்தின் சாயலை - அவள் தன்
மகனிடம் கண்டு கொண்டாள்

தனையொத்த சிநேகிதரோடு
தனை மறந்து வாழ்கின்றாள்
தவிப்புக்களை புதைத்தபடி
தனக்குள்...

இவ்வாறான நிலையில் தான்
முதியோர் இல்லம் சென்றேன் நான்
இணையில்லா தன் வேதனைகளை
இலகுவாகவே அவள் பகன்றாள்

அவள் சொன்னது இலகு தமிழில் - ஆனால்
அதில் உள்ளதுவோ பெரும் அனுபவம்
அவளைப் போல் எத்தனை உள்ளம்
அரவணைப்புக்காய் ஏங்குதோ!
அவனியில்...




ர.மயூரி, மட்டுவில்.

# வாழ்க்கையில் நடப்பவை....

பிரிவுகள் என்றும்
நிரந்தரமில்லையடி...
கவலைகள் என்றும்
கனவுகள் தானடி...
இன்பங்கள் என்றும்
இன்னிசை தானடி...
வாழ்க்கை என்றும்
இன்பமடி....
உன் உறவுகள் என்றும்
உனக்கு சொந்தமடி....

ச.புவித்ரா, கச்சாய் வீதி
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக் கரைகளில் மண் அகழ்வுக்குத் தடை

## மீள்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை


அக்கராயன், ஜூலை 11
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களை அண்டிய பகுதிகளில் கிரவல் மண் அகழ்வைத் தடை செய்ய வேண்டும் என மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்படுவதால் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன்குளம், இரணைமடுக்குளம் ஆகியவற்றின் வெளிப்பகுதிகளில் பெருமெடுப்பில் கிரவல் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. கிளிநொச்சியின் அக்கராயன் குளத்தை அண்டிய கிராமங்களும் முல்லைத்தீவின் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களும் அங்கு இடம்பெறும் மணல், கிரவல் மண் அகழ்வு, காடழிப்பு ஆகியவற்றினால் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

இதனால் குளத்தின் கட்டுமானத்துக்கும் அபாயம் தோன்றியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-18)

# இடர் முகாமைத்துவ குழுவினரால் முதலுதவிச் சிகிச்சை முகாம்கள்



வவுனியா, ஜூலை 11
வவுனியா இடர் முகாமைத்துவ குழுவினர் முதலுதவி சிகிச்சை முகாம்களை கிராமங்கள் தோறும் நடத்தி வருகின்றனர்.

கிராம சேவகர்கள், பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர், இடர் நிகழும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய முதலுதவி தொடர்பான பயிற்சிகள் இந்த முகாம்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இடர் நிகழ்வின் போது பாதுகாப்பான இடங்களில் மக்களை அமர்த்துதல் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், மலசலகூட வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், மருந்து உபயோகம், மருந்து கட்டும் முறைகள் உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்த முகாமில் விரிவாக விளக்கமளிக்கப் படுகின்றன. (க-402)

# கலாசார விழா ஏற்பாடுகள் துரிதம்

அக்கராயன், ஜூலை 11
வவுனியா வடக்கில் சிறப்பான வகையில் கலாசார விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

''கடந்த ஆண்டைப் போன்று நடப்பாண்டிலும் வவுனியா வடக்கு பிரதேச செயலகம் கலாசார விழாவை சிறந்த முறையில் நடத்தவுள்ளது. இதன் ஒரு கட்டமாக பாடசாலைகள் மட்டத்தில் நாடகப் போட்டி ஒன்றினையும் நடத்தவுள்ளோம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# திருடர்களின் கைவரிசை மீண்டும் அதிகரிப்பு



வவுனியா, ஜூலை 11
வவுனியாவில் உள்ள பல கிராமங்களில் மீண்டும் திருடர்களின்கைவரிசை இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது.

கடந்த காலங்களின் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டதால் பொலிஸார் இரவு வேளையில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் திருட்டுச் சம்பவங்கள் குறைவடைந்து காணப்பட்டன.

தற்போது மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக முருகனூர், கல்நாட்டியகுளம், கோமரசன்குளம் ஆகிய கிராமப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது.

அண்மையில் முருகனூர் சித்தி விநாயகர் ஆலயத்தில் பெறுமதிமிக்க விக்கிரகங்கள் திருட்டு போயுள்ளன.

மேலும் கல்நாட்டியகுளம் கிராமப் பகுதிகளில் திருட்டு முயற்சிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவங்களினால் கிராம மக்கள் இரவு வேளையில் பீதியுடன் இருப்பதைக் காண முடிகின்றது.

எனவே பொலிஸார் மீண்டும் மேற்படி பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (க-421)

> “ குறிப்பாக முருகனூர், கல்நாட்டியகுளம், கோமரசன்குளம் ஆகிய கிராமப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

# தீர்வின்றித் தொடர்கின்றன மன்னார் மீனவர் பிரச்சினைகள்

## விசனம் தெரிவிக்கிறார் கூட்டுறவு சமாசத் தலைவர்

மன்னார், ஜூலை 11
மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்ந்தும் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னார் மாவட்ட மீனவர்கள் போர் காரணமாக பல்வேறு துயரங்களை அனுபவித்தனர். தமது உடைமைகள், தொழில் உபகரணங்கள், வீடுகள் என்பன வற்றையும் தமது உயிர்களையும் இழந் துள்ளனர்.

மேலும் இக் காலப் பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை இவர்களது தொழிலை பெரிய அளவில் பாதித்துள்ளது. இந்திய மீனவர்களின் ட்றோலர் படகுகளினால் இந்த மீனவர்களின் தொழில் உபகரணங்கள் இழுத்துச்செல்லப்பட்டுள்ளன.

மேலும் அக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பாஸ் நடைமுறையும் மீனவர்களுக்கு இன்னல்களைக் கொடுத்தது.

தற்போது போர் முடிவடைந்த நிலையில் பாஸ் நடைமுறை தளர்த்தப்பட்டுள்ளமை மீனவர்களுக்கு ஆறுதலாகக் காணப்படுகின்றது.

ஆனால் இந்திய இழுவைப் படகுகளின் வருகை பல மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் மன்னார் மாவட்ட மீனவர்கள் ஆழ் கடலில் வாரத்தில் செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய 3 தினங்கள் மட்டுமே தொழிலுக்குச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.


ஏனைய தினங்களில் தொழிலுக்குச் சென்றால் இந்திய மீனவர்களின் படகுகளால் எமது மீனவர்களின் வலைகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் சேதப்படுத்தப் படுகின்றன.

கடல் தொழில் உபகரணங்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள மீனவர்கள் இன்று வரை பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை இழந்துள்ளனர். அதனால் அவர்களுக்கு எந்த விதமான இழப்பீடுகளும் வழங்கப் படவில்லை.

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் இந்திய இழுவைப் படகுகளின் வருகை நிறுத்தப்பட வேண்டும். தடை செய்யப்பட்டுள்ள தொழில் முறைகள் எமது மாவட்டத்தில் நிறுத்தப்பட வேண்டும். இதன் மூலமாகவே எமது மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

மன்னார் மாவட்டம் 32 மீனவர் சங்கங்களையும், 10ஆயிரம் மீனவக் குடும்பங்களையும் கொண்டது. மேலும் மன்னார் மாவட்டத்தில் 3100 படகுகள் தொழிலில் உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)



முல்லைத்தீவில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. அகில இலங்கை இந்து மாமன்றம் இந்த உதவிகளை வழங்கியது. முள்ளியவளை ஸ்ரீ கல்யாண வேலவர் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் 59 குடும்பங்களுக்கு சுமார் 19 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன. இவற்றை முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் வைபவ ரீதியாக வழங்கினார். இந்த நிகழ்வில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரான மு.கதிர்காமநாதன், உதவிப் பிரதேச செயலர் ஆர்.குருபரன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் கே.மார்க்கண்டு, முல்லைத்தீவு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஸ்ரீரங்கன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-435)

# ஓமந்தையில் பன்றிகளால் தொல்லை

ஓமந்தையில் பன்றிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. வேப்பங்குளம், அரசன்குளம், அலைகல்லுப்போட்டகுளம், வேலங்குளம் உட்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகளின் தோட்டங்களுக்குள் பிரவேசிக்கும் பன்றிகள் அங்கு பயிரிடப்பட்டுள்ள மரவள்ளி, மரக்கறிவகைகள் ஆகியவற்றை நாசம் செய்வதுடன் அயலில் உள்ள குளங்களில் காணப்படும் சேற்றைக் கிளறுவதால் துர்நாற்றம் வீசுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பன்றிகளைத் தாக்குவதோ, விரட்டுவதோ அல்லது கொல்வதோ தண்டனைக்குரிய குற்றமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளதால் அவை அச்சமின்றித் திரிகின்றன.

காடழிப்பு நடவடிக்கைகள் ஓமந்தையை அண்மித்துள்ள காடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பம்பைமடு, கிடாச்சூரி ஆகிய பகுதிகளில் பெருமளவில் பன்றிகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. (க-402)

## பிரதேச செய்தியாளர்கள்

தேவை

★ பரந்தன் ★ முழங்காவில் ★ ஓமந்தை
★ விசுவமடு ★ புதுக்குடியிருப்பு ★ வவுனியா
★ வட்டக்கச்சி ★ முத்துஐயன்கட்டு ★ செட்டிகுளம்
★ உருத்திரபுரம் ★ முல்லைத்தீவு ★ மடு
★ பூநகரி ★ புளியங்குளம் ★ முருங்கன்

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு பிரதேச செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் தமது சுய விவரங்களை editor @ uthayan.com என்ற - மின் அஞ்சல் முகவரிக்கோ அல்லது உதயன் வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும்.

**இடபம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**மிதுனம்:** உங்களது வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள்.

**கடகம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் ஏற்படும். அரச காரியங்கள் இழுபறியாகும். திடீர் பயணங்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**நாளை**

ஆனி-28 வெள்ளிக்கிழமை 12.07.2013
திதி: சதுர்த்தி மா.06.07 வரை
நட்சத்திரம்: மகம் பி.ப. 04.53 வரை
சுபநேரம்: 05.59 - 07.29 வரை
இராகுகாலம்: 10.29 - 11.59 வரை

**துலாம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும். கோபம் நீங்கும்.

**விருச்சிகம்:** வியாபாரத்தில் இருந்து வந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**தனுசு:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். உங்கள் வாயை சிலர் கிளறி வேடிக்கைப் பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**மகரம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.

**கும்பம்:** பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மீனம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | | | 4 | | 5 |
| 4 | | 5 | | | 9 | 1 | 2 | 6 |
| 6 | | | 1 | | | | | |
| | | 8 | | 2 | 6 | 9 | | |
| 9 | | 1 | | 4 | | 8 | | 2 |
| | | 7 | 9 | 1 | | 6 | | |
| | | | | | 5 | | | 4 |
| 5 | 9 | 4 | 8 | | | 2 | | 1 |
| 7 | | 2 | | | | | 6 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 4 | 5 | 6 | 8 | 7 | 3 | 1 |
| 5 | 8 | 1 | 7 | 9 | 3 | 4 | 6 | 2 |
| 7 | 6 | 3 | 2 | 1 | 4 | 9 | 5 | 8 |
| 6 | 1 | 7 | 3 | 2 | 9 | 8 | 4 | 5 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 5 | 6 | 2 | 9 |
| 9 | 5 | 2 | 8 | 4 | 6 | 3 | 1 | 7 |
| 8 | 7 | 6 | 4 | 5 | 1 | 2 | 9 | 3 |
| 1 | 2 | 9 | 6 | 3 | 7 | 5 | 8 | 4 |
| 4 | 3 | 5 | 9 | 8 | 2 | 1 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி தியாகராசா
வள்ளிநாயகிதேவி

தோற்றம்
05.07.1954

மறைவு
24.06.2009



எம் ஆருயிர்த் தாயே! பாசமிகு அன்னையே!
இரண்டு பேர் ஒன்றொன்றாய் உன் வயிற்றில் உதித்தோம்
தொட்டுத் தூக்கி எமை உன்தோள் மீது சாய்த்து
பட்டுமேனி பழுதுபடாது அல்லும் பகலும் அரவணைந்து
மட்டில்லா மகிழ்வோடு எமை வளர்த்த அன்னையே!

அன்னையே! எத்தனை கனவுகள் கண்களில் சுமந்து
நெஞ்சில் சுகமான பாரமாய் எமைத் தாங்கி வாழ்ந்தீர்கள்
எம் வாழ்வில் முன்னேற்றத்தின் முதல்படியாய் இருந்து
முழுமுதற் தெய்வமாய் எமை வழிநடத்தினீர்கள்
இமைப் பொழுதில் ஏனம்மா கண்மூடித் தூங்கினீர்கள்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் தாயே!
நிலவில்லா வானமாய் இருண்டு போனது எம் இல்லமது....
விழிகள் தேடுகின்றன உயிருக்குள் உறைந்த உங்களை!

ஆண்டுகள் நான்கு கடந்தாலும் அம்மா!
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
நித்தம் நித்தம் கண்ணீரில் எமை நனைய விட்டு
தினம் தினம் உங்கள் நறைகளை பேசவிட்டு
மௌனமாய் இறைவழியில் சென்ற மாயம் என்ன அம்மா!
அம்மா! அம்மா! என்று அழைக்கின்றோம்....
ஏங்குகின்றோம் – எமக்காக
ஓடிவரும் தூரத்தில் நீங்கள் இல்லையே அம்மா!
என்றும் பிள்ளை வடியான் திருவடியே கதியென்றீர்கள்
நன்று உலகில் நாம் வாழ அவனே துணையென்பீர்கள்
ஈன்றெடுத்து எமை ஆளாக்கி விட்ட அன்னையே!
அறுக சூடிய அவன் தாழில் பெறுக நீர் சாந்தி....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தம்பனை.
அளவெட்டி மேற்கு.
அளவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்



# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
22
*
07
*
1954

விண்ணுலகில்
25
*
06
*
2009

அமரர் சின்னத்தம்பி நடேசமூர்த்தி

ஆண்டுகள் நான்கு கழிந்தாலும்
ஆறாத காயங்கள்
நீண்டிங்கு மனதினிலே
நிலையாக இருக்கிறது
தூண்டும் நினைவுகளில்
தூண்டா குலவிளக்காய் சுடர்கின்றீர்
தீண்டும் இவ் உறவிதனில்
தினந்தோறும் வாழ்கின்றோம்
– என்றும் உங்கள் நினைவினிலே
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி,
[illegible]வெளி.

(38869)(45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் பஞ்சனானந்தன்

Retired Surveyor Drafts-



யாழ்.உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவருமான வீரசிங்கம் பஞ்சனானந்தன் 09.07.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் வீரசிங்கம்-இலட்சுமிபிள்ளை தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லம்மாவின் மருமகனும் பரஞ்சோதி (கிளி) யின் அன்பு கணவரும், ஹரசுதன், லவன், மதன் ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், சச்சிதானந் தன், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கண்மணி, சிவலிங்கம், பத்மநாதன் மற்றும் சத்தியேஸ்வரி, ஏகாம்பரதேவி, கமல நாதன், சாந்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.07.2013) வியாழக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச் சாலையில் காலை 9 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக மாலை 3 மணிக்கு கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 880 0349,
077 886 1855

தகவல்:
குடும்பத்தினர்.

(C/10316)(6.11)

## மரண அறிவித்தல்

### நாகமுத்து சரவணமுத்து



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சரவணமுத்து 06.07.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- முத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் லக்சுமி, உத்தமி, காலஞ்சென்ற பூர்வீகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரோஜாதேவியின் அன்புக் கணவரும் சாந்தினி (சுவிஸ்), தர்மகுமார் (இத்தாலி), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), செந்தில்குமார் (கபிஸ்னா கபே- அச்சுவேலி), திருக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணபவன் (சுவிஸ்), லதாகினி (இந்தியா), அனுராதா (அச்சுவேலி), அனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2013) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் அராலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 361 8014

(சி/10478)(6.11)

## மரண அறிவித்தல்

### திருமதி ராஜேஸ்வரி செல்வரத்தினம்



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி செல்வரத்தினம் (09.07.2013) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்வரத்தினம் (ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்திரம்பிள்ளை-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பிரபாகரன், கிருபாகரன், சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், சுகி, ஜெஸ்தா, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியும், ரஜிதரன், றியானா, மதுஷா, யதுஷா, கவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராமச்சந்திரன், இராசநாயகம், இராசதுரை, இராசலட்சுமி, இந்திராதேவி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, குலசிங்கம் மற்றும் சரோஜினிதேவி, பஞ்சரட்ணம், கனகேந்திரன், ஜெயமலர், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"இராஜேஸ் இல்லம்"
மதவடிலேன்,
சுதுமலை வடக்கு,மானிப்பாய்.

தகவல்:
கணவர்.

(30768)(6.11)

# கொச்சைத் தமிழில் பேசுகின்றனர் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11

தொலைக்காட்சி, வானொலிகளின் அறிவிப்பாளர்கள் கொச்சைத்தமிழில் பேசி வருகின்றனர். இந்த நிலை மாறி தமிழை பிழையின்றி உச்சரிக்கக் கூடியவர்களாக தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

தமிழ் ஆசிரியர் ஏ.கே.கீர்த்திராஜனின் செய்யுள் தொகுப்பு நூல் வெளியீடும், மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் இலங்கை கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆறு. திருமுருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்கள் தமிழ் இனத்தின் மீது மட்டுமே பற்றுக் கொண்டுள்ளனர். அதன் மீது கொண்ட பற்றாலே இம் மண்ணில் பல உயிர்களும் இழக்கப்பட்டன. ஆனால் இவர்கள் தமிழ் மீது கொண்ட பற்று குறைவாகவே உள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்றைய காலப் பகுதியில் தமிழை ஒரு பாடமாக கற்பவர்கள் தொகை மிகவும் குறைவடைந்துள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் பா.உமாசங்கர், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கணக்காளர் க.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

## பொதுக்கூட்டங்கள்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் சுகாதாரத் திணைக்கள கால்நடை உற்பத்திப் பிரிவு உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 11

பெரியவிளான் விவசாய சம்மேளன வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் தலைமையில் நடைபெறும். (வ)

# நற்பண்புகளை கொண்டு வருபவையாக கல்வி முறைகள் அமைய வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 11

மாணவ சமுதாயத்திடம் நற்பண்புகளை உருவாக்குபவையாக கல்வி முறைகள் அமைய வேண்டும். எமது சமூகத்திற்கு பொருத்தமான கல்விக் கொள்கை அமைய வேண்டும். இதனுடாகவே சமூகத்திற்கு பொருத்தமான சமூகப் பயன்பாடுடைய மாணவ சமுதாயத்தினை உருவாக்கிக் கொள்ள முடியும் என ஒய்வு பெற்ற யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் தெரிவித்தார்.

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் கல்லூரி முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் கல்லூரியின் வி. எஸ். துரைராஜா திறந்தவெளி அரங்கில் அண்மையில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பெரும்பாலும் படித்தவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர். வன்முறையுடன் கூடிய சமூகம் காணப்படுகின்றது. இதற்கு அடிப்படையில் கல்விமுறையும் காரணமாக அமைகின்றன.

இன்று பெரும்பாலும் கல்விமுறையாகபடிப்பவை எல்லாம் தகவல் திரட்டுக்களாக காணப்படுகின்றன. பரீட்சை எழுதிய மாணவர்களிடம் நாளை அது சம்பந்தமாக கேட்கின்றபோது பெரும்பாலும் மறந்து விடுகின்றனர். இத்தகைய நிலையில் எந்தவித பயன்களும் ஏற்பட வாய்ப்பிருக்காது.

நாம் இதய சுத்தியோடு கல்வியைக் கற்க வேண்டும். ஆதி காலத்தில் இத்தகைய முறை இருந்தது. வாழ்வியல் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்வதற்கான கல்வி முறை எம்மிடையே மரபாகக் காணப்பட்டது. ஆனால் இன்று தொழில் வாய்ப்புக்களை மையமாகக் கொண்ட கல்வி முறையாக எமது கல்வி முறை காணப்படுகின்றது.

தற்போது அனைவரும் கல்வி பெறக்கூடியசூழ் நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் எமது மதத்தினைப் பேணிப் பாதுகாத்து கல்வியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனும் உயரிய நோக்கில் இக்கல்லூரியை இக்கல்லூரியின் நிறுவுனர் நிறுவியிருந்தார்.

கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கினை அடிப்படையாகக் கொண்டவகையில் மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளும் ஏனைய செயற்பாடுகளும் அமைதல் வேண்டும்.

education எனும் ஆங்கிலப் பதமானது எடிட்டியா எனும் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றது. இதன் பொருள் என்ன வென்றால் நல்ல பண்புகளைக் கொண்டு வருதல் என்பதாகும்.

இதன் அடிப்படையில் நல்ல பண்புகளை வெளிக்கொணர்வதாக கல்விமுறை அமைய வேண்டும்- என்றார். (எ)

## வவுனியா தீ விபத்தில் வீடொன்று எரிந்து நாசம்

வவுனியா, ஜூலை 11

அண்மையில் வவுனியா மன்னாங்குளம் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடொன்று எரிந்து நாசமாகியது.

சின்னையா வேலுச்சாமி என்பவரது வீடே இவ்வாறு எரிந்து நாசமாகியது. வீட்டில் வைக்கப்பட்டிருந்த முக்கிய ஆவணங்கள், பணம் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. வவுனியா இடர் முகாமைத்துவக் குழுவினர் பாதிக்கப்பட்ட வீட்டை நேரில் சென்று பார்வையிட்டனர்.

தீவிபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை. வவுனியா இடர் முகாமைத்துவக் குழுவினர் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவையான அத்தியாவசிய உபகரணங்கள் சிலவற்றை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க-402)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த பாரூக் பாயிஸ் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியைச் சேர்ந்த சமூக சேவையாளரும், நாச்சிக்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபரின் புத்திரருமாகிய பாரூக் பாயிஸ் கிளிநொச்சி மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக கிளிநொச்சிமாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார். (ந-6)

## மகா கும்பாபிஷேகம்

பளை, ஜூலை 11

பளை கச்சார் வெளிப் பிள்ளையார் ஆலய புனருத்தாரண பஞ்சகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.29 மணிக்கு இடம்பெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை இடம்பெறும். மகா கும்பாபிஷேகக் கிரியைகள் சிவஸ்ரீ இரத்தினகேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ஒ-9)

## அடிக்கல் நடும் நிகழ்வு

மஹிந்தோதய திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப ஆய்வு கூடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வரணி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.சத்தியசீலன் மற்றும் திணைக்கள உயரதிகாரிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஜ-122)


## ஓய்வு பெறும் அதிகாரிகள்

தென்மராட்சி, ஜூலை 11

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய க.சின்னத்துரை எதிர்வரும் 19 ஆம் திகதியும், பிரதிக் கல் விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி எதிர்வரும் 26 ஆம் திகதியும் அரச பணியிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
22.05.1947

மறைவு
11.06.2013

அமரர் தியாகேசு
கனகசபாபதி

(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர்)

கடந்த 11.06.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் 31 ஆம் நாள் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (11.07.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோயிலாமனை,
கொடிகாமம். (30711)(6.11) குடும்பத்தினர்.

# நீங்கா நினைவில் ஏழாவது ஆண்டு



அமரர் செல்வத்துரை
செல்வநாயகம்

(ஜே.பி,யூ.எம். உயர் நீதிமன்ற சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் - காரைநகர்)

திதி: 11.07.2013

அன்னை மடியில்
03.07.1940

ஆண்டவன் அடியில்
28.06.2006

அன்பும் அறனும் கொண்டு அற வாழ்வு வாழ்ந்து
தென்புலம் எய்தி இன்றுடன் ஆண்டுகள் ஏழாயினஎனினும்
அன்று நாம் வாழ்ந்த வாழ்வில் நீங்கள் காட்டிய வழியே
இன்று வாழ்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சி வேண்டும்
மனைவி.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

37/1, 2/1, மாருதிகோட்,
ஹம்டன் லேன்,
கொழும்பு- 6. (c/ 10256) (45.6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் கதிர்காமு இளையதம்பி

இன்பத்தில்
12.05.1932

துன்பத்தில்
11.06.2013



அன்பு முகம் கொண்டு ஆறுதல்
பொழிந்து இவ்வுலக வாழ்வில்
தூண் என துணை நின்ற இதயத்
தெய்வமே - நீர்
இல்லாமல் போகவில்லை
இறையோடு இணைந்து விட்டீர்- எம்
நினைவோடு கலந்துவிட்டீர்

கடந்த 11.06.2013 அமரத்துவமடைந்த எமது குடும்ப விளக்கு கதிர்காமு இளையதம்பி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.07.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்த னையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், புதுக்குடியிருப்பு, விசுவமடு, கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினருக்கும் மற்றும் நேரில் வந்தும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் குறிப்பாக கிளிநொச்சி வைத்தியசாலை - மருத்துவர், தாதியர், ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இந்த அழைப்பை நேரில் வந்து தரமுடியாமைக்கு வருந்துகின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்பர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உம் ஆன்ம ஈடேற்றத்துக்காக பிரார்த்திக்கின்றோம்.

202/1, விசுவமடு மேற்கு.
விசுவமடு.
தொ.பே. 077 085 8197

குடும்பத்தினர்.
(30724) (45.6)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 11
தாவடி அம்பலவாண கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.
21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 11
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
நாளைமறுதினம் சனிக்கிழமை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.
மகா கும்பாபிஷேகத்தை அடுத்து எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் பெருந்திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.
எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 11
மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி ஆலய அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறும். (வ-9)

### மாணிக்கவாசகர் குருபூசை

தென்மராட்சிஜூலை11
சாவகச்சேரி வாரிவள தான் தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாணிக்கவாசகர் குருபூசை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 6 மணி தொடக்கம் திருவாசக முற்றோதலும், திருவாதவூர் அடிகள் சரித புராண படனமும் இடம்பெறும்.(வ-9)

## முனிவர்கள் ஆத்மாவை எவ்வாறு விவரித்துள்ளார்கள்

ஆனந்தம் நிலைபேறான இன்பம், மேலான இன்பம், முழுமையான இன்பம், அறிவியல் இன்பம், இருமை வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட இன்பம், தூய இன்பம், சிந்தனைக்கும் அப்பாற்பட்ட இன்பம், முக்குணங்களையும் கடந்த இன்பம் என்று முனிவர்கள் ஆத்மாவை வருணித்துள்ளார்கள்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## ஆசிரிய ஆளணி இற்றைப்படுத்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 11
ஆசிரிய ஆளணி தரவு இற்றைப்படுத்தும் செயலமர்வு இன்றும் நாளையும் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்வுக்கு யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய ஆறு வலயங்களுக்கு உட்பட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர்களை யும், அவர்களது முகாமைத்துவ உதவியாளர்களையும் நாளை திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (வ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
23.08.2000

விண்ணில்
11.06.2013



அமரர்
சோமசேகரம் விஷ்ணுவன்

எத்தனை நாள்கள் சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம் மனதை விட்டு அகலவில்லை
உங்களை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

கடந்த 11.06.2013 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் செய்திகேட்டு ஓடோடி வந்து ஒத்தாசை நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தூரத்திலிருந்து தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (11.07.2013) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.
0779779782
(30744)(10.6)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கார்த்தி
பூபாலசிங்கம்

பிறப்பு
04.01.1937

இறப்பு
11.07.2010



பாசமெனும் பாலை ஊட்டி
நேசத்தால் எமை சீராட்டி
கலக்கத்தில் எமக்கு வலுவூட்டி
தக்கதாய் எமக்கு வழிகாட்டி-வாழ்ந்த
எம் குடும்ப விளக்கே
நாம் உள்ள மட்டும் உம்
நினைவிருக்கும் எம் உள்ளமதில்

நினைவலைகளுடன்
குடும்பத்தினர்.
(30713)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுவன்கொட்டியில்

## மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 11
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தித் தமது பயிர்ச் செய்கை நிலங்களைப் பாதுகாக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தட்டுவன்கொட்டி, ஊரியான் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு பெருமளவில் இடம்பெற்று வருகின்றது.
மேற்படி பகுதிகளில் உள்ள நெற் செய்கைக் காணிகளில் இந்த மணல் அகழ்வுகள் இடம்பெற்றுவருவதால் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.
இதனால் பயிர் செய்கைக் காணிகள், பாதிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் பயிர் செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையும் தோன்றியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-6)

## மனனப் போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 11
வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம், மாணிக்க வாசகர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்திய திருமுறை மனனப் போட்டியின் பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.
நாளை வெள்ளிக் கிழமை மலை 4.45 மணிக்கு வண். நாவலர் மகா வித்தியாலயத்தில் சைவ சமய அபிவிருத்திக் கழகத் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் உரை, பரிசில் வழங்கல், சான்றிதழ் வழங்கல் என்பன இடம்பெறும். (ந)

# மாகாணங்களுக்கான தேர்தல் நியாயமானதாக நடத்தப்படுமா?

### கரு ஜயசூரிய எம்.பி. கேட்கிறார்



ஒவ்வொரு தேர்தல் முடிந்ததும் தேர்தல் நியாயமானது அல்ல என்று தான் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

கொழும்பு,ஜூலை 11
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கு நியாயமான முறையில் தேர்தல் நடத்தப்படுமா? என்பது கேள்விக்குறியாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.
கொழும்பில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒவ்வொரு தேர்தல் முடிந்ததும் தேர்தல் நியாயமானது அல்ல என்றுதான் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.
தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை கணக்கிலெடுக்காமை, அரச சொத்துக்களைப் பயன்படுத்துதல், வாகனங்கள் பாவனை, ஹெலிக்கொப்டர் பாவனை , அரச வீடுகள் பாவனை என்பவை அரசில் அதிகாரமுள்ளவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.
வட மாகாணசபைத் தேர்தல் குறித்து சர்வதேச கவனம் திரும்பியுள்ளதால் வட பகுதி மக்களுக்கான ஜனநாயக வாக்களிக்கும் உரிமையை உறுதி செய்ய வேண்டும்.இதற்கானபொறுப்பு இந்தமுறை தேர்தல் ஆணையாளர் வசமுள்ளது.
வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் 17 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். -என்றார். (ச)

## வருடாந்த இடமாற்றங்களுக்கு கிழக்கில் விண்ணப்பிக்கலாம்

திருகோணமலை,ஜூலை 11
கிழக்கு மாகாண அரச சேவையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இடமாற்றம் கோருவதற்குத் தகுதியான உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
முகாமைத்துவ உதவியாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**தொழில் வாய்ப்பு**

**கிளிநொச்சியில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை**

* கணக்காளர் (கணினித் திறமை மற்றும் அனுபவம்),
* கணக்காய்வாளர் (முன் அனுபவம் உள்ளவர்)
* கட்டடப் பொருள் விற்பனையாளர்
* கட்டடப் பொருள் களஞ்சியக் காப்பாளர்
* உந்துருளி உதிரிப்பாக விற்பனையாளர் (அனுபவமுள்ளவர்)
* உந்துருளி திருத்துநர்
* உந்துருளி சுத்திகரிப்பாளர்,
* கணினி இயக்குநர் (Ms Office, Excel)தெரிந்தவராக இருக்கவேண்டும்.

வயது எல்லை 25 வயதுக்கு மேல்
முடிவு திகதி 20.07.2013
கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
சிவகுரு ஹாட் வெயர் மற்றும்
உந்துருளி விற்பனை நிலையம் A 9 வீதி, பரந்தன்,
(37479) (45.6.) தொ.பே. 021 228 0155, 077 772 2305

## மீள்குடியேற்றத்துக்கான தடைகள் குறித்து உடன் ஆராயுங்கள்

### ஹுனைஸ் பாரூக் கேட்கிறார்

வடக்கில் போர் ஓய்ந்து மக்கள் தமது பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். ஆனால் முஸ்லிம்களது மீள்குடியேற்றம் சாத்தியமற்றதாக காணப்பட்டது.

முல்லைத்தீவு, ஜூலை 11
முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம் களின் மீள்குடியேற்றத்துக்கு தடையாகவுள்ள காரணிகள் குறித்து உரிய கவனம் செலுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் கேட்டுக் கொண்டுள்ளார்.
மீள்குடியேற்ற அமைச்சின் ஆலோசனைக் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் வைத்தே மீள்குடியேற்ற அமைச்சர், பிரதி அமைச்சர், செயலாளர் ஆகியோரிடம் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் போர் ஓய்ந்து மக்கள் தமது பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். ஆனால் முஸ்லிம்களது மீள்குடியேற்றம் சாத்தியமற்றதாக காணப்பட்டது.
இதேவேளை மன்னார், முசலி மக்களுக்கும் மீள்குடியேற்ற அமைச்சு உதவி செய்ய வேண்டும்.- என்றார். (ச-10)

**காணி விற்பனைக்கு**

[illegible] இருந்து 250 அடி தூரத்தில் இருபாலை வீதியில் வீடு, [illegible] பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(சி/10317) (10,6) தொடர்பு: 077 103 3347

தென்னிந்திய கலை நுட்பத்தில்

## நுவரெலியாவில் சீதைக்குச் சிலை



நுவரெலியா,ஜூலை 11
இரண்டு கோடி இந்திய ரூபா வில் இலங்கையில் சீதைக்கு கோவில் கட்ட முடிவு செய்யப்பட்டது.
அதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசின் உதவியுடன் இந்திய மத்திய பிரதேசமாநில அரசு செய்துள்ளது.
இந்தக் கோவிலை கட்ட இலங்கையில் உள்ள நகரங்களில் 50 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் நுவரெலியா அருகேயுள்ள திவுரும்பொல என்ற இடத்தில் சீதைக்கு கோவில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.
இராவணனை வதம் செய்த பின்னர் இந்த இடத்தில் வைத்துத் தான் சீதையை ராமபிரான் மீட்டுள்ளார்.
பின்னர் சீதையை அக்னி பிரவேசம் செய்ய வைத்தார். அந்த இடத்தில் தான் தற்போது கோவில் கட்டப்பட வுள்ளது.
இந்தக் கோவில் தென்னிந்திய கட்டட கலை நுட்பத்தில் கட்டப்பட உள்ளது. அதற்கான அலங்காரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெங்களூரைச் சேர்ந்த கட்டட கலை நிபுணர் இதை வடிவமைத்துள்ளார்.
இந்தக்கோவில் இலங்கை மற்றும் மத்திய பிரதேச அரசுகளிடையே சுற்றுலாத் துறையை மேம்படுத்த உதவும். இதற்கான திட்டம் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
இதேவேளை இலங்கையில் சீதைக்கு கோவில் கட்டுவதற்கு இலங்கையின் வரலாற்று நிபுணர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
இதுபோன்ற இடங்கள் மிகவும் அரியவகை கண்டுபிடிப்புகளாகும். அங்கு கட்டடங்கள் கட்டுவதன் மூலம் அதன் வரலாற்று சிறப்புகள் அழியும் நிலை ஏற்படும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர். ராவண பலயா என்ற சிங்கள புத்த மத அமைப்பு சீதையின் கோவில் அமைக்கப்பட முன்பு இராவணனுக்குச் சிலை வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.
சீதைக்கு கோவில் கட்டுவதை எதிர்க்கவில்லை. ஆனால் இலங்கையை ஆண்டதாக புராணத்தில் கூறப்படும் மன்னன் இராவணனை முதலில் அரசு கௌரவிக்க வேண்டும் என்று ராவணபலயா அமைப்பு கேட்டுள்ளது. (ச)

CHUNDIKULI GIRLS COLLEGE
JAFFNA

ANNUAL PRIZE DAY - 2013

Saturday, 13th July 2013, at 9.00am.

*Chief Guests*

The Rt.Rev.**Chiloraj Canagasabey**
(Beshop Of Colombo)
&
Mrs.**Harishini Canagasabey**

*Chairperson*

Ven.**S.J.Jeyaveerasingan**
(Archdeacon Of Jaffna)

A Service Of Thanksgiving

To mark the O.G.A's centenary celebration
on sunday, 14th July 2013, at 4.30p.m.
at St.John the Baptist's Church
Chundikuli, Jaffna.
(c10411)

Parents, old girls & well wishers are cordially invited
Principal, O.G.A. Staff & Students.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கண்காணிப்பாளர்களை தேர்தலில் ஈடுபடுத்த வேண்டாம்

## சோபிததேரர் வேண்டுகோள்

கொழும்பு,ஜூலை 11
வடமாகாணத் தேர்தலில் சர்வதேச கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தக் கூடாது என்று ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர், தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

எதிர்க்கட்சிகள் உள்நோக்கத்துடனேயே மேற்குலக தேர்தல்கள் கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு வரவழைக்க முயல்கின்றனர். தேர்தல் கண்காணிப்பாளர்கள் அவசியம் எனில், ஆசியாவை சேர்ந்தவர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

வடமாகாணத் தேர்தலில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவசியமென எதிர்க்கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளரை வலியுறுத்தியுள்ளன. இதனை ஒருபோதும் நாம் ஏற்க மாட்டோம். அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் செய்கின்ற சதியாகவே அதனை நாம் கருதுகின்றோம். -என்றார். (ச)



# மக்களைத் திசை திருப்பவே '13' நாடகம் ஆடுகிறது அரசு

## ஐ.தே.க. உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 11
மக்களின் மனங்களைத் திசைதிருப்பவே அரசு 13 'திருத்தம்' என்ற நாடகத்தை அரங்கேற்றி வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீநாத் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

நடப்பு அரசு மக்களுக்கு இன்று மூச்சுவிடவும் முடியாதளவு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இன்னும் சில காலத்தில் நாம் சுவாசிக்கும் காற்றுக்கும் இந்த அரசு வரி அறவிடும் என்று அவர் கூறினார்.

கொழும்பு ராஜகிரியவில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய அரசு மக்களுக்கு இன்று மூச்சுவிடவும் முடியாதளவு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இன் னும் சில காலத்தில் சுவாசிப்பதற்காகவும் வரி அற விடும் அளவுக்கு அரசு முன்வந்துவிடும்.

இந்தநிலையில், மக்கள் தமக்கெதிராக இறங்குவர் என்பதை அறிந்த அரசு அவர்களின் கவனத்தைத் திசை திருப்பும் நோக்கில் இந்த '13' என்ற நாடகத்தை ஆடுகிறது. அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தங்கள் தேவையற்றவை.

ஏனென்றால், பதின்மூன்றில் மாற்றம் மேற்கொள்ளாமல், நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கும் விடயங்களை ஈட்ட இயலும். -என்றார். (ச)

# 290 இலங்கை மாணவருக்கு இந்திய அரசின் புலமைப்பரிசில்

கொழும்பு,ஜூலை 11
இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்கு இலங்கையைச் சேர்ந்த 290 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 24 பேரே வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியத் துணைத் தூதரகத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழங்கள் சிலவற்றில் கற்பதற்குத் தகுதியான இலங்கை மாணவர்கள் 290 பேருக்கு வருடாந்தம் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசிலும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசிலும் வழங்கப்படுகின்றன.

நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் அல்லது கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் 120 பேருக்கும், ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் 25 பேருக்கும், பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர சுற்றுவட்ட புலமைப்பரிசில் 2 பேருக்கும், கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான பொது நலவாய புலமைப் பரிசில் 5 பேருக்கும், கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான சார்க் புலமைப் பரிசில் 3 பேருக்கும், மௌலானா ஆஸாத் புலமைப்பரிசில் 50 பேருக்குமாக வழங்கப்படுகின்றன.

இந்த வருடத்துக்கான புலமைப் பரிசில் வழங்கலில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 24 பேரில் 13 பேர், 3 வருட கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச)



> இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசிலும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசிலும் வழங்கப் படுகின்றன.



திருகோணமலை,சுமேதகம பிரதேசத்தில் வசிக்கும் மூன்று இனத்தையும் சேர்ந்த மக்கள் தமது பிரதேச வடிகால் பாதை போடப்படாததை கண்டித்து புதன்கிழமை கண்டி பிரதான வீதியை மறித்து வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச -40)

# 'தன்னியக்க ஸ்டெப்ளர் மெஷின்' மூலம் கிழக்கில் முதன்முறையாக சத்திர சிகிச்சை

சம்மாந்துறை, ஜூலை 11
கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தன்னியக்க ஸ்டெப்ளர் மெஷின் பயன்படுத்தப்பட்டு செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை பூரண வெற்றி அளித்துள்ளது.

இந்தத் தகவலை மருதமுனை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு. எம்.சமீம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறான சத்திரசிகிச்சை இலங்கையில் இடம்பெறுவது இதுவே முதற்தடவை.

மேலைத்தேய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் வளப்பற்றாக்குறை உடைய சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இந்தச் சிகிச்சை நடைபெற்றிருப்பது பெரும் பிரயத்தனமே.

மூலநோய் உள்ளவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யாமல் தன்னியக்க ஸ்டெப்ளர் மெஷின் பயன்படுத்தப்படுவதால் வலி ஏற்படாது. அத்துடன் மீண்டும் மூலநோய் வருவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படமாட்டாது.

இந்தச் சத்திரசிகிச்சையின் நம்பகத் தன்மையை வெளிப் [illegible] ளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.- என்றார்.(ச-10)



# யானைகள் அட்டகாசம் நெற்பயிர்கள் நாசம்

## விவசாயிகள் கவலை



நிந்தவூர், ஜூலை 11
நிந்தவூர் கமநல சேவை பிரிவுக்குட்பட்ட ஐந்துக்கு மேற்பட்ட விவசாயக் கண்டங்களை ஊடறுத்து களியோடை ஆற்றினை தாண்டி வரும் யானைகள் நெற் பயிரை அழிப்பதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

[illegible] பிரதேசத்தில் யானைகள் நெற் பயிரை அழித்து வருகின்றன. ஒவ்வொரு போகமும் யானைகளின் அட்டகாசத்தால் இந்தப் பிரதேச விவசாயிகளின் காணிகள், வயல் பிரதேசங்களில் உள்ள தேநீர் கடைகள், தென்னந் தோட்டங்கள் என்பன சேதமாக்கப்படுவது வழமையாகிவிட்டது.

காவலுக்கு பிரத்தியேக ஆள்கள் விவசாயக் குழுக்களால் நியமிக்கப்பட்டிருந்தும், யானைகளின் அட்டகாசத்தினை கட்டுப்படுத்த முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-10)

# பள்ளத்தில் வீழ்ந்தது பார ஊர்தி

கண்டி,ஜூலை 11
ஹற்றன் பொகவந்தலாவை பிரதான வீதியில், டிக்கோயா தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் புதன்கிழமை காலை பார ஊர்தி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து குறித்த பார ஊர்தி வீதியை விட்டு விலகி சுமார் 60 அடி பள்ளத்தில் வீழ்ந்தமையினாலேயே ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சாரதிக்கும் நடத்துனருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தினால் பார ஊர்தியும் தேயிலை செடிகளும் அதிகளவில் சேதமடைந்துள்ளன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்கனவே அனுமதித்த இடத்தில் இன்று மீண்டும் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஜுலை 11
மக்கள் ஏற்கனவே மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட அக்கரைப் பிரசேத்தில் இன்று வியாழக்கிழமை மீண்டும் மக்களை மீளக்குடியமர்த்த ஏற்பாடுகள் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

> கடந்த 2011 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அக்கரை, இடைக்காடு பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது அக்கரைப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அக்கரை, இடைக்காடு பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் அக்கரைப் பகுதியில் குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் கண்ணி வெடிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு அங்கிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

குறித்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி கண்ணி வெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும் கடந்த 7 மாத காலமாக மக்களை அங்கு மீளக்குடியமர்த்துவதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் திடீரென அந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று வியாழக்கிழமை அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போதும், மீளக்குடியமரும் மக்களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அக்கரைப் பகுதி வீடுகள் எதுவுமற்ற பாலைவனப் பிரதேசம் போன்று காட்சியளிக்கும் சூழ்நிலையில் மக்கள் எந்தவிதமான உதவிகளுமின்றி மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# அடையாள அட்டை பெறும் நடமாடும் சேவை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜுலை 11
தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நடமாடும் சேவை ஒன்று நல்லூர் பிரதேச செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது என்று ஆள்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் எச்.எம்.ஐ.கே.ஹேரத் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள், தேசிய அடையாள அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளை வந்து பதிவு செய்யுமாறும் இரண்டு வாரங்களுக்குள் அடையாள அட்டைகள் கிடைக்கப்பெறும் என்றும் உதவி ஆணையாளர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் தமது அடையாள அட்டை இலக்கத்தை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை கொடுப்பதன் மூலம் பதிவுசெய்து கொள்ளலாம். அடையாள அட்டை இலக்கம், கடவுச் சீட்டு, வங்கிப் புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களில் உள்ளமையால் அவற்றைப் பிரதிசெய்து கொண்டு வருதல் இலகுவாக இருக்கும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் சத்தியக் கடதாசி கொடுத்தல் வேண்டும். அல்லது பாடசாலைகளால் வழங்கப்படும் மாணவர் விடுகைப் பத்திரம் கொண்டுவருதல் வேண்டும். பிறப்பு உள்ளிட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்கே இவை. கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம், பிரதேச செயலரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அடையாள அட்டை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களைக் கொண்டுவருதல் மூலம் பதிவுகளை மேற்கொள்ளலாம். இரண்டு வாரங்களில் அடையாள அட்டைகள் அனுப்பப்படும்.

இந்த நடமாடும் சேவை நாளைமறுதினம் வவுனியா கச்சேரியில் நடைபெறவுள்ளது என்றார்.

> இந்த நடமாடும் சேவை நாளை மறுதினம் வவுனியா கச்சேரியில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார, ஆள்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் எச்.எம்.ஐ.கே.ஹேரத், 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், அதன் அதிகாரி அமர் மனாஸ், அதன் இணைப்பாளர் ஆர்.எம்.றாசில் ஆகியோர் கலந்துகொள்வர். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பொதுநலவாயத்துக்கு முன் முன்னேற்றம் மிக அவசியம்

விவகாரங்களுக்கான இணை அமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட்டுக்கும், பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ்நோனிஸ்க்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அலிஸ்ரயர்பேர்ட் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னர், நல்லிணக்கம் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பில் இலங்கை முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு தங்காலையில் கொலை செய்யப்பட்ட பிரிட்டன் பிரஜையான குரம் சைக்கின் வழக்குத் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அரசியல் தலையீடுகளின்றி இந்த வழக்கில் நீதி வழங்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தூதுவரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(த- 5)

### புத்தளம் அம்மணிகள் கோண்டாவிலில் கைவரிசை

நால்வரையும் பிடித்துப் பொலிஸிடம் கொடுத்தனர்.பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டது.

கோண்டாவிலில் உள்ள வைரவர் கோயிலில் நேற்று நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்விலேயே இந்தக் கொள்ளை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட நால்வரிடமும் தாம் தொடர்ந்து விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும், இன்று இவர்கள் நீதிமன்றில் முற் படுத்தப்படுவர் என்றும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

### வலி.வடக்கு மக்களின் மனுவில் அமைச்சுக்குக் கால அவகாசம்

பேர் சார்பில் 'ரிட்' மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பாகக் காணி அமைச்சு வெளியிட்டிருந்த இரு வர்த்தமானி அறிவித்தல்களையும் திரும்பப்பெற உத்தர விட வேண்டும் என்று மனு தாரர்கள் கோரியிருந்தனர்.

மனுதாரர்கள் நீதிமன்றிடம் கோரியுள்ள நிவாரணங்களை ஏன் கொடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கங்களை ஜுலை மாதம் 10 ஆம் திகதி மன்றில் முன்வைக்குமாறு கடந்த மே மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், காணி அமைச்சரின் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்கு ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை நீதிமன்றம் அவகாசம் வழங்கி வழக்கை ஒத்திவைத்துள்ளது. (த-5)

**SB TRAVELS & TOURS** SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 15,500/- | LONDON | 95,500/- |
| TRICHI (50kg) | 18,800/- | MALDIVES | 23.800/- |
| CHENNAI | 17,500/- | MILAN | 87,000/- |
| BOMBAY | 28,800/- | NEW YORK | 111,500/- |
| BENGALURU | 25,900/- | MELBOURNE | 106,000/- |
| KOCHI | 19,200/- | PERTH | 102,800/- |
| DELHI | 45,200/- | CANTON | 68,500/- |
| MALAYSIA | 31,300/- | NERITA | 74,500/- |
| SINGAPORE | 28,998/- | | |
| BANGKOK | 30,900/- | TORONTO | 146,500/- |

*Condition Apply
VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 18,800/-, DUBAI -25,200/-, DOHA - 28,800/-
No: 132 Sri Kathirasan Street, Colomb13,
Tel: 0094 2333322, 2334470, 2540280 Fax: 011 2334460
E-mail: sbtravels99@yahoo.com, sbtravels@sltnet.lk

வெல்லுக மகாஜன மாதா

**இங்கிலாந்து மகாராணியினால் சேர் பட்டம் வழங்கப் பெற்ற**

**புகழ்பூத்த மகாஜனனுக்கு கௌரவிப்பு**

best wishes



பேராசிரியர்
**சேர் சபாரட்ணம் அருள்குமரன்**
MD.,Phd.,FRCOG.,FRCS
(மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் துறைத் தலைவர்)

எமது கல்லூரியில் க.பொ.த (உ.த) உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட புகழ்பூத்த மகாஜனன் பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருள்குமரன் அவர்கள் மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவத்துறையில் தரமான தாய் சேய் நலன் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டமைக்காகவும், இருபத்து நான்கிற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டதுடன், பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியமைக்காகவும் மற்றும் மகப்பேற்றுத் துறையில் ஆற்றிவரும் சர்வதேச ரீதியான மகோன்னத பணிக்காகவும் இங்கிலாந்து மகாராணியினால் ''சேர்'' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரிக்குப் பெரும்புகழ் சேர்த்த பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருள்குமரன் அவர்களுக்கு மகாஜனா சமூகம் நாளை (12.07.2013) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர் கூடத்தில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. அந்நிகழ்வில் அனைத்து மகாஜனன்களையும், பெற்றோர்களையும், நலன்விரும்பிகளையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

CONGRATULATIONS!

கல்லூரிச்சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

**கிளுவங் கதியால் விற்பனைக்கு**
முட்கிளுவை, முள்ளில்லாக் கிளுவை
மொத்தம் 900 விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 706 6487
(30764)(3.8.11)

**Sky Computers (Pvt) Ltd**
இல. 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு அருகில்)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
(வியாழன் - 10:00 am) TP:021-222-1417
➔ Dip. in Mobile Phone Repairing
(காலம் - 3 மாதங்கள்)
➔ Dip. in Hardware & Networking
(காலம் - 3 மாதங்கள்)
யாழ் பிரபல ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது.

**SLEAS கருத்தரங்குகள்**
கடந்த கால வினாத்தாள்கள் மீட்டலுடன் இன்றைய வினாத்தாள்களின் போக்குகளும் பரீட்சையை மையமாக கொண்ட விடயங்களும் துறைசார் விரிவுரையாளர்களினால் யாழ். நகரில் யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில் உள்ள
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவில்
ஒவ்வொரு ஞாயிறும் பி.ப 1.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை
வவுனியாவில் C.B.A, மன்னாரில் IDM Nation Campus, வெள்ளவத்தையில் M.N.M கல்வி நிலையங்களில் பதிவுகளை மேற்கொண்டு அந்த நிலையங்களில் நடைபெறும் வகுப்புகளுக்குரிய நேர அட்டவணையைப் பெறவும்.
T.P: 075 416 4564
(C/10417)(6.11)

**கார் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள Nissan Super Saloon N16 கார் உடன் விற்பனைக்குண்டு. (Leesign)
தொடர்பு:- 0777 600047

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ். மாநகரசபை
திருநெல்வேலி எல்லைக்குள்
சகல வசதிகளுடன் கூடிய வீடு தேவை.
தொடர்பு- 0777792713

**மணமகன் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975 உத்தராடம் 1ஆம் பாதம் 12இல் செவ்வாய், கிரகபாவம் 33 3/4, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு அரச, தனியார் நிறுவனத்தில் தொழில்புரியும் ஒழுக்கமுடைய மணமகன் தேவை. உயரம் 5'-1".
தொடர்புக்கு: 0777432645
(30765)
(10,14)

**விற்பனை**
உரும்பிராய் தெற்கு, சிவகுல வீதியில், 4 ½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0778893622
(30768)
(10,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்பாட்டாளர்களின் தவறால் சம்பியனை இழக்கும் அணி

## மாகாண கரப்பந்தில் விக்ரோறியாவுக்கு ஏற்பட்ட கதி

யாழ்ப்பாணம், ஜூலை 11
ஏற்கனவே நடைபெற்று முடிந்த 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டி மீள நடைபெறவுள்ளது. ஏற்பாட்டாளர்களின் ''தொழிநுட்ப'' தவறு காரண மாக மீள நடைபெறவுள்ள இந்தப்போட்டியால் , மாகாண கரப்பந்து சம்பியனான சுழிபுரம் விக்ரோறியா அணியினர் மூன்றாமிடத்துக்கு விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது. இதனால் அந்த அணி வீரர்கள் பெற்றுக் கொண்ட மாகாண சம்பியனுக்கான பதக்கங்களும், வெற்றிக் கிண்ணமும், சான்றிதழ்களும் மீளப் பெறப்படவுள்ளதாகவும், இதனால் குறித்த மாணவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது–
மாகாண மட்டத்தில் நடைபெற்ற 17 வயதுக்குட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இறுதிப்போட்டியில் விளையாட தெரிவு செய்யப்பட்டிருந்த பாடசாலை அணியொன்றில் இடம்பெற்றிருந்த வீரரொருவர் வேறொரு பாடசாலையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அந்தப்பாடசாலை ஏற்பாட்டாளர்களால் போட்டியில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்டது. இதனால் மூன்றமிடத்துக்கான ஆட்டத்தில் பங்குபெறவிருந்த விக்ரோறியா அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை மிகச்சரியாகப் பயன்படுத்திக் கொண்ட விக்ரோறியா அணியினர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளியவளை கலைமகள் அணியுடன் மோதி, அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி மாகாண சம்பியனாகத் தெரிவாகினர்.

எனினும் இதுகுறித்து மாகாண கல்விப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் , இறுதிப்போட்டியில் விளையாடவிருந்த அணியைத் தகுதிநீக்கம் செய்தமை தொடர்பான சுற்றுநிருபத்தில் தெளிவின்மை இருப்பதால் இந்தபோட்டியை மீண்டும் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனால் மாகாண சம்பியனாக தெரிவாகிய விக்ரோறியா அணி மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பங்கு பெறவேண்டியுள்ளது.

மாகாண சம்பியன்கள் என்று வெற்றிக்கிண்ணமும் தந்து, பதக்கமும் சூட்டி, சான்றிதழும் வழங்கிவிட்டு, பத்திரிகைகளில் படமும் போட்டு செய்திகளும் வெளிவந்த பின்னர் தாங்கள் விட்ட தவறு என்று சொல்லிக் கொண்டு, ஏற்பாட்டாளர்கள் எமது சம்பியன் என்ற அந்தஸ்தை பறிப்பது எவ்வகையில் நியாயம்? நாம் ஏதாவது தவறு விட்டிருந்தால் நடவடிக்கை எடுப்பது சரி. ஆனால் எந்த வித தவறையும் நாம் செய்யாத போது, இப்படி போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டு வாரங்கள் கடந்த பின்னர் மாகாண அதிகாரிகள் நடப்பது நீதியா? என்று பாதிக்கப்பட்ட மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும், பாடசாலை சமூகத்தினரும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன்,
''இது எம்முடைய தொழிநுட்ப தவறால் நிகழ்ந்த விடயம் என்பதால் , இந்த தவறை எப்படி நிவர்த்திப்பது என்பது தொடர்பாக இதில் சம்பந்தப்பட்ட நான்கு அணிகளினதும் அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரை அழைத்து கலந்துரையாடினோம். இதன் போது குறித்த பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒருமனதாகவே இந்தப் போட்டியை மீண்டும் நடத்துவதெனவும், சம்பியனான விக்ரோறியா அணி மூன்றாமிடத்துக்கு விளையாடுவதெனவும் முடிவெடுத்தனர். இதனை விக்ரோறியாக் கல்லூரி சார்பில் கலந்து கொண்டிருந்த பொறுப்பாசிரியர்களும் ஏற்றுக் கொண்டனர். இந்த முடிவை எந்த அணி மீதும் நாங்கள் வலிந்து திணிக்கவில்லை. மீள்போட்டி நடைபெறவுள்ளதால் விக்ரோறியா அணிக்கு வழங்கப்பட்ட வெற்றிக்கிண்ணம், சான்றிதழ்கள் என்பன மீளப்பெறப்படவுள்ளன என்றார்.

எனினும் இவ்வாறு போட்டி ஒன்று நடைபெற்று முடிந்து பல நாள்களின் பின்னர் ஏற்பாட்டாளர்கள் தாம் விட்ட தவறுக்காக அணி ஒன்றின் சம்பியன் நிலையை நீக்குவது என்பது விளையாட்டுத் துறைக்கு ஆரோக்கியமான விடயமல்ல எனவும், இது ஒரு தவறான முன்னுதாரணமாகி விடுமென்றும், மாணவர்களின் விளையாட்டு உணர்வுகளை மழுங்கடிக்கச்செய்துவிடும் என்றும் விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ங)

### அரச அதிபர் வெற்றிக் கிண்ண போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்.அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் 2013க்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளன.
ஆடவர், மகளிர் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம், கரம், சதுரங்கம், கயிறிழுத்தல் மற்றும் சைக்கிளோட்டம் ஆகிய போட்டிகளும், மகளிர் பிரிவுக்கான பூப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.
அதில் கலந்துகொள்ள விரும்புவோர் யாழ்.செயலக நிர்வாகக் கிளையில் விளை யாட்டு உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பட்டதாரிப் பயிலுநர்களும் குறித்த போட்டிகளில் கலந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

### கருங்கண்டல் றோ.க.த.க. மூன்றாமிடம்

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான குழு நிகழ்வில், கபடிப் போட்டியில் கருங்கண்டல் றோ.க.க.த.க. பாடசாலை மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. மடு வலயப் பாடசாலைகளில் ஒன்றான கருங்கண்டல் றோ.க.த.க. அணி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் 3 ஆம் இடத்தைத் தட்டிக் கொண்டுள்ளது. (ற)

### திருத்தி வாசிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 11
கடந்த ஞாயிற்றுக் கிழமை உதயனின் 22 ஆம் பக்கத்தில் வெளியான 'உதயசூரியன் மென்பந்து கிரிக்கெட் தொடர்' என்ற செய்தியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் என்பதற்குப் பதிலாக ஞானமுருகன் எனத் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. திருத்தி வாசிக்கவும்.(ற)

### வடமாகாண தடகளப் போட்டிகள்

# பதிவு செய்யப்பட்ட சாதனைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டு வரும் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 6 ஆவது தடகளப் போட்டிகளின்போது புதிய சாதனைகள் பல பதிவு செய்யப்பட்டுள்ளன.
19 வயதுப் பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கடந்த வருட சாதனையான 1:04:06 என்ற நேரப் பெறுதி, இம்முறை


ரகுராஜ்

சென்.ஜோசப் மகா வித்தியாலய மாணவியான அனற்றினால் முறியடிக்கப்பட்டது. குறித்த தூரத்தை அவர் 1:04:00 எனும் நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
அதேவேளை, 800 மீற்றர் ஓட்டத்தில் கடந்த வருட சாதனையான 2.40 என்ற நேரப் பெறுதியும், அனற்றினால் இம்முறை முறியடிக்கப்பட்டது. அவர் குறித்த தூரத்தை 2.38 என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையை பதிவு செய்தார்.


அனற்

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 1.84 மீற்றர் என்ற கடந்த வருட சாதனையை, இம்முறை யாழ்.மத்திய கல்லூரி மாணவன் ரகுராஜ் முறியடித்தார். அவர் இம்முறை 1.86 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் 52.55 மீற்றர் தூரம் என்ற கடந்த வருட சாதனையை, இம்முறை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் டபிள்யூ.


லிவிங்ஸ்டன்

சீ.எல்.லிவிங்ஸ்ரன் முறியடித்தார். அவர் இம்முறை 57.92 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 1.85 மீற்றர் உயரம் என்ற கடந்த வருட சாதனையை, இம்முறை யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் செந்தூரன் முறியடித்தார். அவர் இம்முறை 1.90 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். (ற-23)


செந்தூரன்

(மேலும் வரும்)




வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட 6ஆவது தடகளப் போட்டிகளில் மகளிர் பிரிவில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவாகிய வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவி லோகாஜினிக்கு, வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் விருதை வழங்கினார். (ற-23)



### 17 வயது தேசிய அணியில் சென்.ஜோன்ஸ் மாணவன்

யாழ்ப்பாணம், ஜூலை 11
17 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய அணிக்கான 20 பேர் கொண்ட குழாமில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனான துவாரசீலன் உள்வாங்கப்பட்டுள்ளார். இவர் ஒருவரே 17 வயதுக்குட்பட்ட தேசிய அணியில் உள்வாங்கப்பட்டுள்ள தமிழ் வீரராவார். (ற-23)

### இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி சில்வெஸ்ரர் விளையாட்டுக் கழகம்.
பி.ப. 4.30 மணி
அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி சில்வெஸ்ரர் விளையாட்டுக் கழக 'ஏ' அணி. (ற-23-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை வீழ்த்தியது இந்தியா



## இறுதியாட்டத்தில் மீண்டும் இரு அணிகளும் பலப்பரீட்சை

இலங்கை அணிக்கு எதிரான முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டத்தில் 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளில் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடக்கிறது. இதன் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

### நிதான தொடக்கம்

கட்டாய வெற்றியை எதிர்நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி சுமாரான ஆரம்பத்தைக் கொடுத்தது.

எரங்கா, தில்ஷன் பந்துகளை பவுண்டரிக்கு அனுப்பிய ஷிகர் தவான், 15 ஓட்டங்களுடன் வெளியேறினார். ரோகித்துடன் அணித் தலைவர் விராத் கோஹ்லி இணைந்து மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்த, இந்திய அணி 15 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அவ்வப்போது பவுண்டரி எல்லைக்கு பந்தை அனுப்பிய கோஹ்லி (31), தினேஷ் கார்த்திக் (12) ஆகியோர் நிலைக்கவில்லை. இந்திய அணி 29 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 119 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ரோகித் (48), ரெய்னா (4) ஆட்டமிழக்காது இருந்தனர். தொடர்ந்து இடியுடன் கூடிய பலத்த மழை நீடித்தது. சுமார் ஒரு மணி நேரம் 40 நிமிடங்களுக்கு பின் மழை நின்றதையடுத்து போட்டி 26 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது. அதையடுத்து இலங்கை அணிக்கு 178 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.



### புவனேஷ்வர் அசத்தல்

எட்டக்கூடிய இலக்கை துரத்திய இலங்கை அணி, புவனேஷ்வர் வேகத்தில் தடுமாறியது. ஆட்டத்தின் மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தில் தரங்கவை (6) வெளியேற்றிய அவர், அடுத்த பந்தில் ஆபத்தான சங்ககாராவை ஓட்டங்கள் எதுவும் பெறாத நிலையில் வெளியேற்றினார். தொடர்ந்து அசத்திய புவனேஷ்வர் குமார், ஜெயவர்த்தனா (11), திரிமனே (0) ஆகியோரை வெளியேற்றினார். இதையடுத்து 31 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்த இலங்கை அணி ஆட்டம் கண்டது.

அடுத்து வந்த மத்தியூஸ் (10), சண்டிமால் (26), மெண்டிஸ் (13) ஆகியோர் ஓரளவு கைகொடுக்க, மற்ற வீரர்கள் யாவரும் ஒற்றை ஓட்டங்களுடன் வந்து சென்றனர். இலங்கை அணி 24.4 பந்துப் பரிமாற்றங்களில் 96 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்கையும் இழந்தது இலங்கை அணி. அதையடுத்து இந்திய அணி போனஸ் புள்ளியுடன் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. வேகத்தில் அசத்திய புவனேஷ்வர் ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

ஓட்ட வீதத்தின் அடிப்படையில் இலங்கை அணியும் இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரில் இருந்து வெளியேறியது. (ற)



# இந்திய கிரிக்கெட் சபைக்கு சிக்கல்

இந்திய விளையாட்டுத்துறை அமைச்சின் சட்டத்தின் கீழ் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயற்படாவிட்டால் அச்சபை இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தத்தின் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தனியார் அமைப்பான இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இதுவரை இந்திய விளையாட்டுத்துறை அமைச்சின் விதிகளின் கீழ் செயற்படுவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேசிய விளையாட்டு அபிவிருத்தி சட்டத்தின் காரணமாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் படி, இந்தியாவை சர்வதேச ரீதியில் பிரதிநித்துவப்படுத்துவதற்கு, விளையாட்டு அமைப்பொன்று தேசிய விளையாட்டு சம்மேளனத்தில் பதிவுசெய்யப்பட வேண்டும். அத்தோடு, தகவல் அறிவதற்கான உரிமையின் கீழும் அந்த விளையாட்டு அமைப்பு வர வேண்டும்.

தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாயின் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்த விதிகளுக்கு ஏற்று நடக்க வேண்டும், தற்போதுள்ளதைப் போன்று இந்த விதிகளுக்குக் கட்டுப்பட முடியாது எனத் தெரிவித்தால், இந்திய அணி இந்தியாவை சர்வதேசப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது போகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)


# விரைவில் மீள்வேன்

காயத்தில் இருந்து மீண்டு 100 சதவீத முழு உடற்தகுதியை இன்னும் ஒரு வார காலத்திற்குள் பெற்றுவிடுவேன் என்று இந்திய அணி சகலதுறை ஆட்டக்காரர் இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரர் இர்பான் பதான் அண்மையில் இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ் டிராபி தொடரின் போது அவரது தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது. அதையடுத்து மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கும் முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான அணியில் இருந்து நீக்கப்பட்டார். இதுகுறித்து கருத்து வெளியிட்ட இர்பான் பதான்,

''காயம் காரணமாக முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாட முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. எனக்கு ஏற்பட்டிருக்கும் காயம் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இதனால் விரைவில் குணமடைந்துவிடுவேன். தற்போது ஓட்டப் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். இன்னும் ஒரு வாரத்தில், பந்துவீச்சுப் பயிற்சி மேற்கொள்ள திட்டமிட்டுள்ளேன்.

இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டி போட்டியில் விளையாட நிறைய வாய்ப்புகள் வருகின்றன. ஆனால், உடற்தகுதியை கருத்தில் கொண்டு, பயிற்சியில் மட்டுமே முழுக்கவனம் செலுத்தி வருகிறேன். விரைவில் காயத்தில் இருந்து மீண்டு, இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பதே இலக்கு. இதனால் தான் கவுண்டி போட்டியில் விளையாட வரும் வாய்ப்புகளை மறுக்கிறேன்'' என்று தெரிவித்தார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11/07/2013


# ஜடேஜாவுக்குக் கண்டனம்

முத்தரப்பு தொடரில் ரெய்னாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஜடேஜாவுக்கு, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) கண்டனம் தெரிவித்தது.
முத்தரப்பு கிரிக்கெட் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கிறது. அதில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக லீக் ஆட்டத்தின் போது, ஜடேஜா பந்துவீச்சில், வந்த இரண்டு பிடிகளை ரெய்னா தவறவிட்டார். இதனால் இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.
இதற்காக ஜடேஜாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பி.சி.சி.ஐ., பிரச்சினைக்கான காரணத்தை எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.
தவிர, இச்சம்பவம் தொடர்பாக இந்திய அணியின் மனேஜர் ரஞ்சிப் பிஸ்வால், பயிற்சியாளர் பிளட்சர் ஆகியோரிடம் விசாரித்த பின் நடவடிக்கை எடுக்கப்படும் எனதெரிவிக்கப்பட்டது.

(ற)

ஐரோப்பிய நாடான சைப்பிரசில்
வெறும் 625,000/= ரூபாவுடன்
படிக்கச் சென்று மாதாந்தம் ஒரு
இலட்சம் சம்பாதிக்கலாம்
(நிபந்தனைகளுடன்)
A/L, 27 வயதிற்குக் கீழ்
படிக்க, உழைக்க
சட்ட ஆலோசனைக்கு
திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(30783)(6.11)

# ஆஸியின் வேகத்தால் இங்கிலாந்துக்கு இக்கட்டு



ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் போட்டுத்தாக்க, இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 215 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.
இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகள் இடையில் கடந்த 1882ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் நடத்தப்படுகிறது. இதன்படி, இந்த ஆண்டுக்கான தொடர் இங்கிலாந்தில் ஆரம்பமாகியது. இதன் முதல் போட்டி நாட்டிங்கோமில் நடைபெற்று வருகின்றது. அதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் அலெஸ்டர் குக் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.
ஆஸ்திரேலிய அணியில் சர்வதேச அனுபவம் இல்லாத, இடது கை சுழற்பந்து வீச்சாளரான 19 வயதான ஆஸ்டன் அகார் அறிமுக வீரராக வாய்ப்பு பெற்றார். இங்கிலாந்து அணியில் சந்தேகத்தில் இருந்த ஸ்டீவன் பின் இடம் பிடித்தார்.
இங்கிலாந்து அணிக்கு குக், ஜோ ரூட் ஆரம்பம் நல்ல ஆரம்பம் கொடுத்தது. ஸ்டோர்க்கின் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய குக் 13 ஓட்டங்களுடன் வெளியேறினார். பற்றின்சன் பந்துப்பரிமாற்றங்களில் ரூட் இரண்டு பவுண் டரிகள் விளாசினார். சிடில் பந்துவீச்சில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார் டிரோட். இதன் பின் பந்து வீச வந்த சிடில் வேகத்தில் அசத்தினார். முதலில் ரூட்டை (30) வெளியேற்றிய இவர் பீற்றர்சனை 14 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.
நீண்ட நேரம் நின்ற டிராட்டும் 48 ஓட்டங்களுடன் சிடிலின் வேகத்தில் பறந்தார். ஸ்டோர்க் பந்தை இயான் பெல் பவுண்டரிக்கு விரட்டினார். இம்முறை மீண்டும் பந்துவீச வந்த சிடில் பெல்லை 25 ஓட்டங்களுடன் வெளியேற்றினார். பிரையரும் (1) இவரிடம் சிக்கினார். இலக்குகள் அடுத்தடுத்து சரிய, அணி ஓட்டங்கள் எடுக்கத் தடுமாறியது. இந்தநிலையில், பிராட் (24) பற்றின்சன் பந்தில் இலக்கைப் பறிகொடுத்தார். பேர்ஸ்டோவ்வையும் (37), ஸ்டீவன் பின்னையும் (1) ஸ்டார்க் கவனித்து அனுப்பினார். சுவான் (1) ஆகியோர் ஒற்றை இலக்கங்களுடன் பவிலியன் திரும்பினார். இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 215 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகுளையும் இழந்தது. ஆஸ்திரேலியாவின் சிடில் 5, பட்டின்சன் 3, ஸ்டார்க் 2 இலக்கு களைக் கைப்பற்றினர்.


(ற)

City & Guilds
DEC. 2013
யாழ் நகரில்
APSS International இன்
City & Guilds UK
பொறியியல் வகுப்புக்கள்
APSS International சர்வதேச நாடுகளில் இயங்கும் 1700 Centres க்கு சவாலாக விளங்கி 2012/2013கான 5 world Gold Medal (Medal of Excellence) வென்று பொறியியல் துறையில் சரித்திரம் படைத்துள்ளது. அதில் இருவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள்.
• Civil Engineering / Quantity Surveying
• Telecommunication Systems
• Electrical & Electronics Engineering
▸ Diploma (6Months) ▸ Ad.Diploma (6Months)
RESULT GUARANTEED
Course Director : Prof.K.Chandirabose
GOLD MEDAL WINNERS



Prof.K.Chandirabose
OUTSTANDING LECTURER
Electrical & Electronics
இறுவிலை சேர்ந்த Mr.A.Sivakumar
AD.DIPLOMA CIVIL ENGINEERING
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-222 4403
HOTLINE: 077 2306642 | 077 3867695
வகுப்புக்கள் ஆரம்பம்
14th July 2013
Head office : APSS INTERNATIONAL NETWORK (PVT) LTD. | No: 35, Nelson Place, Colombo 06.

# சச்சினின் மகனுக்கு அணியில் இடமில்லை



மும்பை உத்தேச அணியில் (14 வயதுக்கு உட்பட்டோர்) இருந்து சச்சின் மகன் அர்ஜுன் நீக்கப்பட்டார்.
இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சினின் மகன் அர்ஜுன்.
கடந்த ஆண்டு நடந்த 14 வயதுக்கு உட்பட்டோருக்கான தொடரில் சம்பியன் பட்டம் வென்ற மும்பை அணியில் இடம் பெற்றார். இந்த ஆண்டுக்கான 30 பேர் கொண்ட உத்தேச ஜுனியர் அணியை மும்பை கிரிக்கெட் சங்கம் (எம்.சி.ஏ.,) நேற்று வெளியிட்டது. சமீபகாலமாக எம்.சி.ஏ. சார்பில் நடத்தப்பட்ட போட்டியில் அர்ஜுன் ஒரு முறை கூட அரைச்சதம் அடிக்கவில்லை. இதையடுத்து ஜுனியர் மும்பை அணியில் இருந்து அர்ஜுன் நீக்கப்பட்டார்.
இதுகுறித்து எம்.சி.ஏ., அதிகாரி ஒருவர் கூறுகையில்,
''அர்ஜுன் செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை. அவரது துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தாலும், ஒருமுறை கூட அரைசதத்தை எட்டவில்லை. களத்தடும்பும் சிறப்பாக இல்லை. தற்போது எடுக்கப்பட்டுள்ள முடிவு அவருக்குள் மாற்றத்தை ஏற்படுத்தும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஒரு மாறுபட்ட அர்ஜுனை பார்ப்போம் என்ற நம்பிக்கை உள்ளது'' என்று தெரிவித்தார்.

SAFE PC
100% CLEAN
துரித கணினி பழுதுபார்க்கும் சேவை
✪ உங்கள் இன்ரநெற்றில் பிரச்சனையா?
✪ உங்களால் உங்களுடைய கணினியை சரியாக இயக்க முடியவில்லையா?
✪ வைரஸ் தொல்லையால் அவஸ்தைபடுகிறீர்களா?
உங்களுடைய கணினி, மடிக்கணினி, இன்ரநெற், எந்தவித பிரச்சனையானாலும்
நாங்கள் வருகிறோம். நீங்கள் அழைக்க வேண்டியது..........
021 5 67 57 47
SAFE PC
கணினி கண்காணிப்பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.